குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 36 | நள – மார்கழி – 10—1—77 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

வரிச்சுமை குறையட்டும்…
…வருவாய்ப் பெருகட்டும்

ஒருகாலத்தில் அசையாச் சொத்துக்கள் என்று நாம் நம்பியிருந்த சொத்துக்கள் இப்போது அசையும் சொத்துக்கள் ஆகி வருவதை எல்லோரும் உணர்கிறோம். அதிலும் நிலத்தையே நம்பியுள்ள – அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தையே நம்பியுள்ள தனி நபர்களும், அற நிறுவனங்களும் உணரும் காலத்தில் உள்ளோம்.

குடும்பமும் தர்மமும்:

உலகில் காலந்தோறும் மக்களின் எண்ணங்கள் – பழக்க வழக்கங்கள் இவற்றில் மாறுதல் உண்டாவது இயற்கையே. இதனல் பலப்பல நாகரிகங்கள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே வருகின்றன என்பதையும் நாம் அறிவோம்

அனுபவத்தாலும் தெரிந்து வருகிறோம். ஆனால் நம் பெரியோர், உடைமைகளை-அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள் என்ற இரு பிரிவுகளாகப் பிரித்து வைத்ததை எந்தக் கால நிலையிலும் அப்படியே ஏற்று நடத்தி வந்திருக்கிறோம். இதிலும் தனிப்பட்டோர் நிலையில் அந்தந்தக் குடும்பத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி தளர்ச்சிக்கு ஏற்ப அசையாச் சொத்துக்கள் கைமாறிப் போயிருக்கின்றன. ஆனால் நம் முன்னோர் அந்தக் குடும்பங்களும் அழிந்துவிடாமல் நிலையாக இருப்பதற்குச் சில தருமங்களின் பெயரால் சொத்துக்களைப் பிரித்து எழுதிவைத்தனர். அந்தந்த தருமங்களும் ஏற்பட்ட நோக்கத்தை அவற்றிற் கண்டபடி நிறைவேற்றியபிறகு அதில் எஞ்சக்கூடியதாக உள்ள வருமானத்தை அவர்கள் குடும்பச் செலவுகளுக்குப் பயன்படும் படியும் திட்டம்செய்து வைத்தார்கள். நிலமாகஉள்ள சொத்துக்களை இவ்விதம் தருமம் என்றபெயரால் ஏற்படுத்திவைத்து விட்டால் அந்தப் பகுதியாவது நிலையாக இருக்கும். அதன் பயன்களைக்கொண்டு தரும நிர்வாகம், குடும்ப நிர்வாகம் ஆகிய இரண்டும் நிலையாக நடத்தப்படும் என்றே நம்பி இருந்தார்கள். இது ஒரு வகை.

அரசு, கோயில், அறநிறுவனங்கள் :

மற்றொருவகையாக நமது அறநிறுவனங்களில் திருமடங்கள் திருக்கோவில்கள், மற்றும் இவற்றில் நடைபெறவேண்டிய குறிப்பிட்ட வழிபாடுகள் இவை நிலையாக நடைபெறுவதற்கேற்ப நில நிபந்தங்கள் ஏற்படுத்தியுள்ளனர். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் முழுவதுமாக இந்த நிறுவனங்களும், மற்ற தருமங்களும் நடத்தப் பயன்படுத்த வேண்டும் என்றும் இவ்விதம் விடப்படும் நிபந்தங்களை யாரும் விற்கவோ, அல்லது மாற்றவோ எவ்வித உரிமையுமில்லாமல் அதற்கு ஏற்ப கட்டுத்திட்டங்களுடன் ஏற்படுத்தியுள்ளனர். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானங்களை நமது ஆகமங்கள் முதலிய நூல்களில் விதித்திருக்கிறபடி இன்னின்னவற்றிற்கு இன்னின்ன திட்டம் என்றும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதில் தவறினால் அரசு அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துச் சீர்படுத்தி அதில் தவறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துத் தண்டம் விதித்தும் அவர்களை மாற்றி அவற்றைத் தக்கமுறையில் நடத்தக்கூடிய நல்லவர்களை அறங்காவலர்களாக நியமித்து நடத்தும்படியும் உதவி இருக்கிறது. திட்டம் என்றால் நமது ஆகமங்களில் விதிக்கப்பட்டது; மாற்றி அமைக்கக் கூடாதது என்ற கருத்தில் அவற்றை அமைத்திருக்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகள் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கைக்கொள்ளப் பட்டு நடைபெற்று வந்திருக்கின்றன. அக்காலத்தில் நமது தமிழகத்தில் முடியுடை வேந்தர்களும், பிற்பாடு வந்த மகம்மதியர்களும், ஆங்கிலேயர்களும், சுதந்திரம் வந்த பிறகு நமது இந்தியப் பேரரசும் இந்த அறநிறுவனங்களில் நடைபெற வேண்டிய அனைத்து வழிபாடுகளும் நித்தியப்படி, ஏறுபடி விழாக்கள் முதலியனவும் – செம்மையாக நடைபெறுகின்றனவா? என்பதைக் கண்காணித்து வந்திருக்கின்றன.

அறநிலையங்களைப் பாதிக்கும் சட்டதிட்டங்கள் :

ஆனால் தற்பொழுது இந்த அறநிறுவனங்களில் நடைபெற வேண்டிய வழிபாடுகள் சரிவர நடைபெற இயலாத நிலையில் பலப்பல சட்டதிட்டங்களை அரசு அமைத்து வருவதால் இன்னல்கள் பல ஏற்பட்டு வருகின்றன. சோஷலிசப் பாணி என்ற பெயரால் உழுபவர்களின் துன்பம் துடைப்பதாகவும் நிலமில்லா விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதாகவும் எண்ணிப் பலப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தத் திட்டங்கள் முழுமையாக உருவெடுக்கு முன்னமேயே அரசியலில் தொடர்புடையவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் முதலியோர் அறிக்கைகளும், மேடைப் பேச்சுக்களும் வெளியிட்டு வருவதன் பயனாகத் தொல்லைகள் பல விளைகின்றன. அந்த ஏழை எளியவர்களும் உதவிபெற்று இப்போதுள்ள சமுதாய நிலையில் வளர்ச்சியுற்று மேல்நிலை அடையவேண்டுவதே. அதற்கான திட்டங்கள் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியதே. ஆனால் அவர்களை வாழ வைக்க நினைக்கும்போது அதே போல மற்றவர்களின் நிலை தாழாமல் அவர்களையும் வாழவைக்க வேண்டும் என்பதையும் ஏற்று இவர்களுடைய நிலையும் கெட்டுப் போகாதவாறு தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டியதையும் அவர்கள் கடமையாகக்கொள்ள வேண்டாமா? அதிலும் ஏழை எளியவர்களுக்குப் பலவகையிலும் உதவிவரும் ஆலயங்களும் அறநிலையங்களும் பாதுகாக்கப்பட வேண்டாமா? இந்த வழியில் அவர்கள் சிந்தனை வளரவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

அன்றாட வழிபாடுகளுக்கே முட்டுப்பாடு :

அண்மையில் மேலே சொல்லியவண்ணம் குடிகள் துயர் துடைப்பதாக எண்ணி அரசு எடுத்த நடவடிக்கைகள் குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய நிலுவைகளைச் செலுத்தக் காலக்கெடு கொடுத்தது, ஒரு சிறிது காலங்கழிந்ததும் அதனைத்

தள்ளுபடி செய்ததாக உத்தரவு பிறப்பித்தது. அவற்றோடு உழுபவர்க்கே நிலம் உடைமை யாக்கப்படவேண்டும் என்ற பிரசாரமும் சேர்ந்து குத்தகை கொடுப்போர் மனம் திரிந்து, விளைந்திருந்த காலத்தும் அவர்கள் தாம் கொடுக்கவேண்டிய தைக் கொடாது காலங்கடத்தி வரச்செய்துவிட்டது நிலுவை களை வசூலிக்க எடுத்த சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கும் உரிய முறையில் தீர்ப்புக் கிடைக்க இயலாத நிலையும் ஏற்பட்டு விட்டது. இந்தச் செய்திகள் உழுபவர்களுக்கும் நிலத்தில் உரிமை உடையவர்களுக்கும் அரசுக்கும் தெரிந்த ஒன்றுதான். மேலும் இந்த நிலையால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து அரசுக்கு அவ்வப்போதும் அறநிலையங்கள் நினைவூட்டுகள் (மெமோரண்டங்கள்) மூலம் தெரியப்படுத்தியும் அதற்குத் தக்க பரிகாரங்கள் கிடைக்கவில்லை இதன் விளைவாக இப்போது நமது ஆலயங்கள், மடங்கள் இவற்றில் நடத்தப் பெறவேண்டிய வழிபாடுகள் நடத்த இயலாத நிலை அண்மையில் இரண்டொரு ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தமிழக அறநிலைய ஆட்சித் துறையும் அறியும். சில ஆலயங்களில் தடையில்லாது, சந்நிதிகளில் அணையாது எரிந்து வரவேண்டிய விளக்குகளை எரியவிடக்கூட எண்ணெய் வாங்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பக்தர்கள் இதனை அறிந்து மனதில் துன்புற்று வெளியிட்டுப் பேசுவதும் பலரும் அறிந்ததே.

கருணை மழை :

நமது தமிழகத்தில் பல மாவட்டங்களில் சென்ற சில ஆண்டுகளாக மழையில்லாமல் குடிக்கக்கூடத் தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுவிட்டது. நமது மாநில அரசும் மத்திய அரசும் பல கோடிக்கணக்கான பணம் செலவு செய்து பாடுபட்டும் ஓரளவே நிவாரணம் அளிக்கக் கூடியதாக இருந்தது. ஆண்டவன் அருளால்இவ்வாண்டு தமிழ கத்தின் பெரும் பகுதிகளிலும் சென்ற சில மாதங்களில் மழை பெய்தது. மழை முகங்கண்ட மக்கள் உணவு வகைகள் உற்பத்தி செய்ய முற்பட்டிருப்பதும் தெரிந்த செய்திதான். இவ்விதமாகத் தமிழகத்தில் நிலைமை திருந்தத் தொடங்கிய ஆண்டில் என்றும் பொய்யாது நீர்வளம் கொழிக்கும் தஞ்சைத் தரணியிலே பயிர் செய்வதற்கு நீரில்லாத நிலை ஏற்பட்டு மக்கள் அல்லலுற்று வாடி வருகிறார்கள். பொய்யாது காத்து வந்த அன்னை காவிரி யாறும் வறண்டு போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. தமிழக அரசு பெருமுயற்சி எடுத்து அண்டை மாநிலமாகிய கர்நாடகத்திலிருந்து கடனாகப்பெற்ற தண்ணீரும் பற்றாது

போகும்நிலை ஏற்பட்டுவிட்டது. காவிரியாற்றிலிருந்து பாசனத்துக்கு விடவேண்டிய தண்ணீர் விட இயலாதநிலை ஏற்பட்டு முற்றும் அடைத்துவிட்ட செய்தியும் அறிந்தவொன்று. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று போற்றப் பெற்று வரும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நில உடைமையாளர்கள், குடிமக்கள் அனைவரும், இறைவனை நோக்கி வேண்டிக்கொண்டு ஏங்கியதன் விளைவாக காலப்பிற்பாடாக ஓரளவு கருணையோடு மழை பெய்யுமாறு செய்து, முழுவதுமாக இல்லாவிட்டாலும் நிலங்களில் சாகுபடி செய்தோம் என்ற நிலையை உண்டாக்கிக் கொடுத்தான் ஆண்டவன்.

வரிச்சுமை :

இந்த நிலையில் இப்போது, அரசு நில வரியை மிகவும் உயர்த்தியிருப்பதோடு புன்செயாக உள்ளவற்றிற்கும் நன்செய்க்கு உள்ளது போன்றே முழுத்தீர்வையும் விதித்து உத்தரவிட்டிருக்கிறது. பத்தாண்டுக் காலத்திற்குள் வரிவிகிதங்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஏற்றப்பட்டு வந்ததல்லாமல் இவ்வாண்டில் அதிகப்படி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. முன்பு கொடுத்து வந்ததைபோல் மூன்று மடங்கு கூட்டிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. விளைவில் எதிர்பார்த்த பலனும் கிடைக்காது, கிடைக்கும் என எதிர்பார்க்கும் வருமானத்தையும் குடிகள் மேலே சொல்லியிருக்கும் காரணங்களால் கொடாமல் அழும்பு பண்ணும் நிலை உருவாகியிருக்கும் இந்தக் காலத்தில் இவ்விதம் வரியையும் உயர்த்தி நில உடைமையாளர்களுக்கு ஒரு பெருஞ்சுமையை உண்டாக்கியிருக்கிறது இச்செயல். இந்தத் துன்பம் தனிப்பட்டவர்களுக்கும் உண்டு. ஆனால் இந்த வரிவிதிப்பால் மிகப்பெரிதும் பாதிக்கப்படப் போவது நமது அறநிறுவனங்களே. நமது அறநிறுவனங்களுக்கு அவற்றின் நில உடைமையால் கிடைக்கும் ஆண்டு வருமானம் முழுவதுமாகக் கிடைத்து வந்தாலே அவற்றில் நடத்தப்படவேண்டிய வழிபாடுகள் முதலியவற்றை மட்டுமே நடத்தக்கூடியதாக இருக்கும். பெருந்திருப்பணிகள் முதலியனவும் குடமுழுக்கு முதலியனவும் நடத்துவதற்குப் பற்றுக்குறை ஏற்படக் கூடியதாக இருந்துவந்திருக்கிறது. இப்போது மேலே கண்டபடி வருவாய்க்குறை ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் இந்த வரிவிதிப்பு அற நிறுவனங்களை மிகமிகப் பாதிக்கும் என்பதை எடுத்துச்சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

வருவாயில் பங்கீடு :

பொதுவாகவே இந்த அறநிறுவனங்களுக்கு ஒழுங்காக எவ்விதத்தடையும் இல்லாது வருமானங்கள்வந்தால் அவற்றின் வருமானத்திலிருந்து 20 விருந்து 25 சத விகிதம் வரிகளுக்கும், 8½ சத விகிதம் அறநிலைய இலாகா உதவித் தொகை கொடுப்ப தற்கும், 25 சத விகிதம் நிர்வாகத்துக்குமாகக் கட்டாயச் செல வுகள் செய்ததுபோக 53, அல்லது54 சதவிகிதம்போக நிகரமாக உள்ள வருவாயைக்கொண்டு நித்தியப்படி, ஏறுபடிகள், ஆண்டு விழாக்கள் முதலியவற்றை அததற்குள்ள திட்டப்படி செய்து எஞ்சிய தொகையிலிருந்து ஆலயக் கட்டிடங்களைத் துப்புரவாக வைப்பதற்கும், ஆண்டாண்டும் ஏற்படும் சிறு சிறு பழுதுகள் பார்ப்பதற்கும் போதாததாக இருக்கிறது. இப்போது வருவாய் சரிவர வரக்கூடியநிலை மாறித் துன்பப்படும் இக்காலத்தில் வரும் வருவாய் மேலே சொன்ன மறுக்க இயலாத வரிகளுக்கும் செலவினங்களாக உள்ள உதவித் தொகைகள் கொடுப்பதற்கும் நிர்வாகச் செலவுக்கும் பங்கிட்டுக்கொடுத்துவிட்டால் பூசனைகள் எவ்விதம் செய்வது என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

அரசும் ஆலயப்பாதுகாப்பும் :

ஆலயத்தின் வருவாய் அதில் நிகழவேண்டியதாக நமது பெரியோர்களால் ஆகம விதிப்படி மாற்றம் ஏதுமின்றி நடத்தப்படவேண்டிய செலவுகள் குறைக்கப்பட்டால் வழிபாடு களில் குறைபாடு ஏற்படும். இத்தச் சீர்கேடு நிகழ்ந்தால் நாட்டின் வள வாழ்வு குன்றும் என்று திருமூலர் போன்ற அருளாளர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தக் கருத்தை எல்லா மதத்தினரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் நமது இந்தியா வந்திருக்கும் போரா இனத்தவர்களின் குரு வாக விளங்கும் ஒரு பெரியவரும் இந்தக் கருத்தை வெளி யிட்டிருக்கிறார்கள். ஒரு நாட்டில் வளம் குறையாது காக்கப்பட வேண்டுமே யானால், - அந்த நாட்டின் மக்கள் நல்லவர்களாக அரசியல் சட்ட திட்டங்களுக்கும், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப் பட்டவர்களாக வாழ வேண்டுமே யானால் அந்த மக்களின் மனத்தில் இறைவனது சிந்தனை - பக்தி உணர்வு நீங்காது அவரவர் சமயக் கருத்துக்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும். அவ்விதம் அந்த மக்களை இந்த நன்னெறியில் நின்று காத்து வருவன நமது அறநிறுவனங்கள். ஆகவே அவை செம்மை யாகப் பரிபாலிக்கப்படவேண்டும் என்ற கருத்தை இந்த மதத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமது

அறநிறுவனங்கள் செம்மையாகப் பரிபாலிக்கப்பட்டு உரிய முறையில் இயங்கவேண்டுமேயானுல் அதனதன் சொத்து வருவாய்கள் ஒழுங்காகக் கிடைத்தற்கு ஏற்ற வழிவகைகள் ஏற்படுதல்வேண்டும். "மன்னரும், முனிவரும் உன்னுவ பொன்னுல் முடியும்" என்ற அறவாக்குக் கேற்ப நமது எண்ணங்களும் அமைதல் வேண்டும். நமது தமிழக ஆளுநர் மாண்புமிகு சுகாதியா அவர்கள்கூட, 'அறநிறுவனங்களின் வருவாய் முழுவதும் அந்த அறநிறுவனங்களின் நன்மைக்கே பயன்படுதல் வேண்டும்' என்றுகூறியிருப்பதையும்நினைவுகூர்தல் பொருந்தும். அந்த வருவாயும தடையேது மில்லாது வருதற்கு உள்ள வழிவகைகள் செய்துதர வேண்டியது அரசின் தலையாய கடமையாகும்.

கோயில் அறநிலையங்களுக்கு வரிவிலக்கு :

இவற்றையெல்லாம் சிந்தனை செய்து நமது தமிழக அரசு அறநிறுவனங்கள் நல்லமுறையில் இயங்கத்தக்கதாக இதுபோன்ற அதிக வரிவிதிப்புக்கள் முதலியவற்றிலிருந்து விலக்கு அளித்தும் விவசாயச் சட்டங்களிலும் இந்த அறநிறுவனங்கள் இயங்குவதற்கு ஏற்ப விதிமுறைகள் திருத்தம் செய்தும் நமது நன்னெறி காத்து வரவேண்டும். நமது தமிழ் மன்னர்கள் இந்த நிறுவனங்களுக்கு நிலநிபந்தங்கள் அளித்தபோது இறையிலி யாக வரி இல்லாதவகையில் அளித்துக் காத்தனர். பற்றுக்குறை ஏற்பட்ட போதெல்லாம் 'முன்னவனர் பூசைகள் முட்டிடின் அதனல் நாட்டுக்கும் அரசுக்கும் தீங்கு நேருமே' என்றஞ்சி அதற்கு ஈடு செய்தும் இவை நல்ல முறையில் இயங்கத்தக்கவற்றைச் செய்தும் வந்தார்கள் என்பவற்றை நமது தமிழகக் கல்வெட்டுக்கள் பலவாறுகக் கூறுகின்றன. அவற்றை நாம் இப்போது சிந்தித்தல் பொருந்தும.

பிரார்த்திப்போம் :

எனவே மத்திய அரசும், மாநில அரசும் ஆலயங்களுக்கும், அறநிலையங்களுக்கும் நில வருவாய் தடையில்லாது கிடைக்கவும், வரிச் சுமையை விலக்கவும் தக்க நடவடிக்கை எடுத்து உதவ வேணுமாய்க் கோருகிறேம். கோரிக்கையை நிறைவேற்றுவார்கள் என நம்புகிறேம். நம்பினேர்க்கருள்செய்யும் சொக்கநாதனிடம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

29-வது ஆண்டுவிழா

அருள்மிகு. கும்பேசுவர சுவாமி திருக்கோயிலில்
நடைபெற்றபோது வழங்கி யருளிய

ஆசியுரை

2—1—1977

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் :

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 29 வது ஆண்டு விழா இங்கே சிறப்புடன் நடைபெறுகிறது. கடந்த 29 ஆண்டுகளாக ஒல்லும்வகை சைவ - சமய வளர்ச்சிக்கும் சைவத் திருமுறைகளின் விளக்கத்திற்கும் இத்திருக்கூட்டம் ஆற்றிவரும் நல்ல பணிகளை அறிந்து மகிழ்கின்றோம். இத் திருக்கூட்டத்தினர் தங்கள் ஊர்ப்பெயரை முன்னர் இணைத்துக் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் என்று 29 ஆண்டுகளுக்கு முன்னரே, பெயர் சூட்டியது பாராட்டிற்குரியது. கும்பகோணம் என்ற இவ்வூர்ப்பெயர் இன்று குடந்தை என அனைவராலும் அறியப்பட்டுள்ளது. இப்பெயர் தேவாரத் திருமுறைகளில்

குடந்தை என வழங்கப்படுவதை உணர்ந்து 29 ஆண்டுகளுக்கு முன்னரே அதனைத் தம் திருக்கூட்டத்தின் பெயருக்கு முன்னர் இணைத்து வழங்கியது மகிழ்வூட்டுகின்றது.

நன்றிமறவாத நற்செயல் :

தாம் பிறந்து வளர்ந்த மண்ணை - தம்மை வாழ்விக்கும் இடத்தை நன்றி மறவாது போற்றுதல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாகும். தாங்கள் பிறந்த ஊர் அதிக அறிமுக மில்லாத சிற்றூராக இருந்தால், இன்றும் சிலர் தங்கள் ஊர்ப் பெயரைச் சொல்லாது, அருகில் இருக்கும் நாடறிந்த ஊர்ப் பெயரையே கூறுவதைக் காண்கின்றோம். ஈன்று புறந் தரும் தாய்தந்தையரை மறந்தார்க்கு உய்தி இல்லை என்பர். அது போலத் தாயாக நின்று வளர்க்கும் பெருமை மிக்க பிறந்த மண்ணை மறவாது போற்றுதல் ஒவ்வொருவருக்கும் கடமை யாகும். தாம் பிறந்த மண்ணின்மாட்டு நன்றி செலுத்துவது மட்டுமல்லாமல், அம்மண்ணின் பெருமையை நற்குண நற் செயல்களால் உலகறியச் செய்தல் நமது பொறுப்பாகும். தாய் தந்தையரிடம் வைக்கும் பற்று உற்றார் உறவினரிடமும் - பின் உலகினரிடமும் விரிவது போல பிறந்த மண்ணில் வைக்கும் அன்பும் பற்றும் தேச பக்தியாக விரிந்து சிறக்கும். தாம் தந்தையிடம் பக்தி வேண்டும். நன்கு படித்த மகன் படிக்காத தந்தையைத் தன் தந்தை என்று கூறக் கூச்சப்படு கின்றான். அப்படி நினைப்பது பாவம். அவர்களால்தான் நாம் முன்னுக்கு வந்தோம் என்ற நன்றி உணர்வு இருக்கவேண்டும். விளைந்த இடத்தையும் வித்தையும் மறக்கக்கூடாது. விளைந்த இடம் - தாய் வித்து - தந்தை. தாய்நாடு என்கிறோம். தாய் வயிற்றிலிருந்து பிறந்தபின் நம்மை வளர்ப்பது பூமாதேவிதான். எல்லோருக்கும் தாய் பூமாதேவி. எல்லோருக்கும் தந்தை சூரியன். தட்பம் (குளிர்ச்சி) உடையது அனைத்தையும் தாயாகவும் வெப்பம் உடையது அனைத்தையும் தந்தையாகவும் காணுகின் றோம். இதுபற்றியே, பல பெருமக்களும், நாடறிந்த பல பெரிய நிறுவனங்களும் தாம் தோன்றிய ஊர்ப்பெயரை முன்னர்த்தாங்கி நிற்றலை இன்றும் காண்கின்றோம். பள்ளிக்கூடங்கள் மாணவர் களுக்கும், அரசு, பொது மக்களுக்கும் இத்தகு தேசப்பற்றினை ஊட்ட வேண்டும். இவ்வாறு தாம் பிறந்து வாழும் குடந்தை யின் பெயர் விளங்க, அதனை முன்னர் இணைத்து, குடந்தைச் சிவனடியார்த் திருக்கூட்டம் என்று பெயரிட்ட அன்பர்கள் பாராட்டத் தக்கவர்களாகிறார்கள்.

திருவாதிரைத் திருவிழா :

மார்கழித்திங்களில் இவ்விழா நடைபெறுகிறது. இந்நாட்கள் திருவெம்பாவையினைச் சிந்திக்கத் தக்க திருவாதிரைத் திருவிழா நாட்களாக அமைந்துள்ளன. தேவர்களுக்கு வைகறைப் பொழுதாக விளங்கும் மார்கழி மாதம் முழுவதுமே வழிபாட்டிற்குகந்ததாக விளங்குகின்றது. இத்திங்களுள்ளும் சைவர்களுக்குரிய மிகச் சிறந்த விழாவாகிய திருவாதிரையினை ஒட்டிய இப்பத்து நாட்களும் மிகச்சிறந்தனவாகக் கருதப்பெற்று வருதல்மரபாகும். திருவாதிரை விழாப் பத்துநாட்களிலும் ஏனைய திருமுறைகளை எல்லாம் திருக்காப்பிட்டு வைத்துத் திருவெம்பாவையை மட்டும் ஓதி வழிபட்டு வருவது சைவ-சமய சம்பிரதாயமாக இருந்து வருகிறது. இவ்வகையில்தான் நாம் முதலில் ஓதிய பாடல் திருவெம்பாவையாக அமைந்தது.

விஞ்ஞான ரீதியில் சமயம் :

மார்கழி மாதத்தில் வைகறையில் துயில்நீங்கி, குளிர்ந்தநீரில் குடைந்தாடி, சமயச்சின்னங்கள் அணிந்து, தத்தம் இயல்புக்கும் மரபுக்கும் ஏற்ற வகையில் வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும். சம்பிரதாயமாகக் கூறப்படும் சமய நெறிமுறைகள், இன்றைய விஞ்ஞான ரீதியான நலங்கள் பலவற்றை நல்குவதைக் காண்கின்றோம். விடியற்காலையில் துயில் எழுவதும், குளிர்ந்தநீரில் ஆடுவதும் உடல் நலத்திற்கும், உளவளத்திற்கும் சிறந்த நன்மை பயக்கும். காலை வேளையில் தண்ணீரில் நலம்பயக்கத் தக்க ஒருவகை மின்னாற்றல் இருப்பதை உணரலாம். இவ்வாறு நீராடுவதால் பல நோய்கள் நீங்குகின்றன. நல்ல பசி உண்டாகின்றது. காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம் முதலாகக்கூறப்படும் அறுவகைக் குற்றங்கள் அகலும். இவை மட்டுமின்றிக் குளிர்ந்த நீரின் ஆற்றலை வேறு வகையாகவும் அறியலாம் காயம் ஏற்பட்டுக் குருதி பெருக்கெடுத்தால் குளிர்ந்த நீரில் ஒரு துணியினை நனைத்துச் சுற்றினால் குருதிவெளிப்படுதல் அடங்குவதைக் காணலாம். தேள் விஷம், பாம்பின் விஷம் முதலியன தண்ணீருள் இருந்தால் குறைந்து, தம் ஆற்றல் இழக்கும் என்பதனையும் நடைமுறையில் காண்கின்றோம்.

கலன்பூண்டு நீராடுதல் :

காலையில் குளிர்ந்த நீரில் நீராடுதல் நல்லது. அதுமட்டுமின்றி பொன் முதலியவற்றால் செய்யப்பெற்ற அணிகலங்களை

அணிந்துகொண்டு நீராடுவது உடலுக்கு மேலும்பல நலன்களைப் பயக்கும் என்பது நமது முன்னோர் கண்ட உண்மையாகும். மாணிக்கவாசகப் பெருமான், திருவெம்பாவையில் இதனைக் "காதார் குழையாடப் - பைம்பூண் கலனாட" எனக் குறித்தருளினார். பொன், வைரம் உருத்திராக்கம் முதலியவற்றில் பட்ட நீர் உடலில் படுவதால் உடல் பல நன்மைகளைப் பெறுகிறது என்பது தமிழர் கண்டறிந்த விஞ்ஞானரீதியான உண்மையாகும். காலையில் நீராடுதல்வேண்டும் என்றுதானே கூறப்பட்டுள்ளது என்று கருதி, வெந்நீரில் நீராடுவோரும் உண்டு. வெந்நீரில் குளிப்பதனால் எப்பயனும் இல்லை. மேலும் அது நரம்புத் தளர்ச்சியினையும் உண்டாக்கும். கடுங் குளிரிலும், தண்ணீரில் குளித்தால், குளித்த பின் குளிர் தெரியாது. அதனைத் தாங்கும் ஒருவகை ஆற்றலைத் தண்ணீரில் இருந்து உடம்புபெறுகிறது. வெந்நீரில் அவ்வாற்றல் இல்லை. எனவே, குளித்தாலும் குளிர்குறைவதில்லை. எனவே, வழிபாட்டிற்கு உகந்த இம்மார்கழித் திங்களில் அனைவரும் வைகறைத் துயில் நீங்கி தண்ணீரில் குளிக்கவேண்டும் என்பதை மணிவாசகர் "சீதப்புனலாடி" என்று குறிப்பிடுகிறார். (சீதம் - குளிர்ச்சி) சீதபுனலாடியபின் சித்தசுத்தி யுண்டாகும் எனவே சிற்றம்பலம்பாடி வழிபட்டுச் சிறப்புறுவர்என்பது தெளிவுறுத்தப் படுகிறது.

உயர்ந்த சமயம் :

சமயம், மதம், நெறி என்பன ஒருபொருளுணர்த்தும் சொற்கள் போலத் தோன்றினும், இவற்றிடையே சிறு சிறு வேறுபாடுகள் உண்டு. சமயம் என்பது - நன்றாகச் சமைக்கப்பெற்ற - அதாவது பக்குவப் படுத்தப்பட்ட வழி என்று பொருள்தரும் மதம் என்பது - கொள்கை. நெறி என்பது வழி. சைவம் - உயிர்களைக் கடைத்தேற்றுதற் பொருட்டு பக்குவப்படுத்தப்பட்ட வழியாக விளங்குகின்றது. சைவ-சமயம் என்பது பழங்காலத்தில் சைவ-நெறி - சிவநெறி என்றே வழங்கப்பெற்றது. சிவத்தை அடையும் வழி என்பது இதன் பொருள். உலகில் பல்வேறு சமயங்கள் உள்ளன. அவையாவுமே ஒரு குறிக்கோளை நோக்கமாகக் கொண்டுள்ளன. இச்சமயங்கள் பலவற்றுள்ளும் சைவ சமயம் மேலானது என்றும் சிறந்தது என்றும் முன்னோர் கண்டு தெளிவுபடுத்தியுள்ளனர். உயர்ந்த சமயம் என்பதற்குப் பொருள், ஒழுங்குக் கட்டுப்பாடுகளை அதிகமாக மேற்கொண்டிருக்கும் நெறி என்பதேயாகும். இக்கட்டுப்பாடுகள், இச்சமயத்தினரை நெறிப்படுத்தி உயர்வுபெற உதவுகின்றன. இத்தகு ஒழுங்குக் கட்டுப்

பாடுகள் உயர உயர அச்சமயமும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. அதைப் பின்பற்றுவோரும் உயர்ந்தோராகக் கருதப்படுகின்றனர். ஒழுங்குக் கட்டுபாடுகள் குறையக் குறைய அவ்வச் சமயங்களின் தரங்களும், பின்பற்றும் மக்களின் தரங்களும் குறைவாகவே கருதப்படுகின்றன. உலகியலிலும் ஒழுங்குக் கட்டுபாடுடையவனே உயர்ந்தவனாக மதிக்கப்படுகிறான்.

புலனடக்கமாவது யாது ?

இத்தகு கட்டுப்பாடுகள் தனி மனிதனுக்குமட்டுமல்ல, ஒரு சமுதாயத்திற்கும், ஒரு நாட்டுக்கும் கூட இன்றியமையாதது. கட்டுப்பாடு என்றவுடன் பொறிகளைப் புலவன் வழிப்போகாது முற்றிலுமாகத் தடுத்துவிடுவது என்பது கருத்தன்று. அளவுக்கு மீறிய புலனடக்கம் வேண்டுமென வற்புறுத்திய சமணம் போன்ற சமயங்கள் வெற்றிபெறவில்லை. ஒரேயடியாகத் தன்னைத்தானே அழித்துக்கொள்வது சமயமாகாது. இன்ப – துன்பங்களை அனுபவிப்பதற்கே பொறிபுலன்கள் இறைவனால் படைக்கப் பெற்றன. புலனடக்கம் என்பதன் பொருள் அளவின்றி இன்பங்களிலேயே மூழ்கிவிடாது, நியதியாக - அளவோடு இவற்றைப் பயன் கொள்ள வேண்டுமென்பதேயாம். நமது சைவ - சமயம் இப்பொறி புலன் அடக்கங்களை முறையாக வற்புறுத்துகின்றது. நமதுசமயம் வற்புறுத்தும் விரதாதிகள் இக்கருத்தில் அமைந்துள்ளதை ஆழ்ந்து நோக்குவோர் அறிவர். மனத்தைக் கட்டுப்படுத்தி-உடல் நலம் பேணப் பழகுதல் சமயம் நமக்கு வழங்கிய நன்கொடையாகும். தமிழகத்தைப் பொருத்தவரை நீதிபோதனைகளைச் சமயமும் சமயச் சான்றோர்களுமே செய்துவந்துள்ளனர்.

இளைஞர்களை நெறிப்படுத்துதல் :

பெற்றோர்கள் இளைஞர்களை இளமை முதற்கொண்டே கட்டுப்பாடான நெறிமுறைகளில் வளர்த்தல் வேண்டும். பதின்மூன்று வயது தொடங்கி, பத்தொன்பது வயது வரையிலுள்ள பருவம் தவறு செய்யும் பருவம். இதனை Teen age என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இப்பருவத்தில் பெற்றோர்களும் - ஆசிரியர்களும், நெறிமுறைகளையும் பண்பாடுகளையும், வரலாறு, புராணம், இதிகாசம் முதலியவற்றின் துணையோடு நன்மைகளையும் எடுத்துரைத்து இளைஞர்களை வழிநடத்த வேண்டும். உதாரணமாக, திருநாவுக்கரசர் வரலாற்றைச் சிந்திக்கலாம். அவரது இளமையில் தந்தையும் தாயும் அடுத்தடுத்து மறைய,

தமக்கை திலகவதியாருக்கு மணம் பேசப்பெற்றிருந்த கலிப் பகையாரும் மறைந்தபோது, திலகவதியார் உயிர் துறக்கத் துணிந்தார். இளைஞராக இருந்த நாவரசர் தமக்கையார் உயிர் விடத் துணிந்ததால், தாம் அதற்கு முன்னரே உயிர்விடுவதாகக் கூறினர். தம்பியார் வாழவேண்டுமெனத் திலகவதியார் உயிர் தரித்தார். தமக்கையார் மாட்டு அத்துணை அன்பு கொண்டிருந்தும், காளைப் பருவத்தில் நாவரசர், தமக்கை சொல்வழி நில்லாது சைவ-சமயத்தைவிட்டு சமணம் சார்ந்ததை வரலாறு காட்டுகிறது. எனவே, இளமையில் தாய் தந்தையர் சொல்வழி நிற்பவர்களும், ஒரு வளர்ச்சி நிலையில் மாறுவதைக் காண்கின்றோம். அப்படிப்பட்ட நேரத்திலும், உரியவகையில் காத்தலே பெற்றோர் கடமை; அவ்வாறு முயன்றும் காக்க இயல வில்லை என்றால் திலகவதியாரைப்போல இறைவனிடம் முறையிட்டு, நல்லறிவு கொளுத்தவேண்டுதலே பெற்றோர் செய்யத் தக்கது. திலகவதியார், சமணஞ் சார்ந்த நாவரசரை - சைவத்திற்கு மீட்கத் திருவதிகை இறைவனைப் பலகாலும் வேண்டி நின்றதைப் பெரியபுராணம் விளக்குகின்றது. இவ்வாறு காக்க வேண்டிய பருவத்தில் உரியகாவல் இல்லாதுபோனல் இளைஞர்கள் நெறிகெட்டு, நெறியல்லாநெறி புகுந்து துன்புறுவர். அத்தகையோரை அயலார்தம்மனம்போனவாறு நெறிப்படுத்தித் துன்பத்தில் செலுத்திவிடுவர்.

வழிகாட்டும் பாடல் :

இன்று இங்கு நடைபெறும் இவ்விழாவின் பயனாக ஒரு பாடலை நினைவூட்ட விரும்புகின்றோம். இந்த ஒரு பாடலை மட்டும் பெற்றோர்கள் போற்றி, இளைஞர்கள் தடுமாறுகின்ற நேரத்தில் எடுத்துரைத்தால் அவர்கள் மனந்திருந்துவர். திருநாவுக்கரசர் பெருமான், தாம் உரிய பாதுகாவலை இகழ்ந்தமையால் சைவம் - விட்டுச் சமணம் சார்ந்து துன்புற்றதை அழகிய ஒரு உவமை வாயிலாக விளக்கியுள்ளார். கிராமப்புறங்களில் உள்ள குளங்களில் குதித்தாடும் இளைஞர்களைக் கரையில் நிற்கும் பொறுப்பற்ற சிலர் 'ஆழம் காட்டுக' என்று மேலும் மேலும் ஊக்கமூட்டி ஆழமான பகுதியில் செலுத்திவிடுவர். ஊக்கப்படுத்தியவர்கள், இளைஞர்கள் கைசோர்ந்து மெய் சோர்ந்து நீந்தமாட்டாது உயிருக்கு ஊசலாடும்போது ஓடிப்போய்விடுவர். அதனையே உவமையாக்கி, அப்பர்பெருமான் இக்கருத்தை விளக்குகின்றார். உரியவர்கள் உரியபோதில் பாதுகாக்கத் தவறினால், அயலார் இளைஞர்களை நெறியற்ற நெறியில் செலுத்தி வீழ்ச்சியடையச் செய்வர் என்பதே இப்பாடல் கருத்து.

" காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரை நின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்."

வாழ்வில் தக்கார் ஒருவரை நமக்கு வழிகாட்டியாகக்கொண்டு உறுதியாகப் பற்றிநிற்றல் வேண்டும். இத்தகுதி வாய்ந்த தக்காரையும், இத்தகைய பாடலையும் பற்றிநிற்பது நாம் தவறுகளைச் செய்யாது நம்மைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகின்றன. எவ்வகையிலும், இளைஞர்களை ஈடேற்ற இயலாது போனால் திலகவதியார் போல இறைவனைப் பிரார்த்திப்போம். பிரார்த்தனை நல்ல பலனைத் தரவல்லது. அவன் திருவுள்ளம் பற்றினால் யாவும் நலமாகும். மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத நிலையிலும், அவன் கருணையின் விளைவாகப் பெய்த மழை சம்பாப்பயிரை 60 நாள் வளர்த்திருப்பதே பிரார்த்தனையின் பயனை விளக்கப் போதுமானது. மேலும் ஒரு 60 நாள் கருணை காட்ட அவன் திருவருளை நினைந்து பிரார்த்திப்போமானால் கருணைமழை கட்டாயம் பெய்து காக்கும் என்று திடமாக நம்பலாம்.

உளக்கோயில் :

சமுதாயச் சிக்கல்கள் தீரவும், மனித இனம் மனத்தூய்மை பெற்றுமாண்புறவும், நமது நாயன்மார்களின் அருள்வாழ்வினைச் சிந்தித்துச் செயல்படுவதே சிறந்த வழியாகும். தம்பொருட்டு, பிறர் உதவியினை என்றும் நாடாத திறமும், என்றும் பிறர்க்குத் தாம் உதவி செய்து நிற்கவேண்டுமென்ற குறிக்கோளும் எல்லா நாயன்மார்கள் வரலாற்றிலும் காணப்படுகின்றன. இவ்வாறு இல்லாவிடினும் தாம் பிறர் உதவியைப்பெற்று, பிறர்க்கும் தாம் உதவிசெய்து வாழவாவது நாம் பழகிக்கொள்ளுதல்வேண்டும். நாயன்மார்களிடமிருந்த இவ்வுயரிய உணர்வினைச் சமுதாயத்தில் பரவச்செய்தால் பல சமுதாயப் பிரச்சினைகள் தாமே தீர்ந்துவிடும். தம்காலில் ஊன்றித் தாமே நிற்கவேண்டுமென்ற எண்ணம் இளைஞர்களுக்கு வரவேண்டும். இன்று இங்கு பேசப்பட்ட பூசலார் நாயனார் அருள் வரலாறு இதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. தம்மிடம் பொருள் இல்லை; கோயில் கட்ட விருப்பமிருந்தது; எவரிடமும் சென்று பொருள் கேட்கவில்லை பூசலார். மனத்தில் உள்ள மாசுகளை நீக்கிய நிலையில் பூசலாரின் நெஞ்சகமே கோயிலாயிற்று. பல்லவன் அமைத்த கற்கோயிலை விடுத்துப் பூசலாரின் தூய மனக் கோயிலில் இறைவன் முன்ன

தாக எழுந்தருளிய செய்தியினைப் பெரியபுராணம் விளக்கிக் காட்டுகின்றது. இத்தகு மனத்தூய்மையினையே திருஞான சம்பந்தப் பெருந்தகையார்,

"அகனமர்ந்த அன்பினராய், அறுபகை செற்று
ஐம்புலனும் அடக்கி, ஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்"

எனக்குறித்தார். காமம் முதலிய அறுபகையினை நீக்கி, ஐந்து புலன்களையும் நெறிப்படுத்தி, அறிவுப்பயிரை வளர்க்கும் தூயோர் நெஞ்சினையே இறைவன் தாம் விரும்பியுறையும் இடமாக – கோயிலாகக் கொண்டுள்ளான் என்பது இப்பாடற் கருத்து. இதில் இறைவனைப் புராணன் எனக் குறித்தனர். புராணன் என்பது புராதனன் என்பதன் திரிபு. இச்சொல்லுக்குப் பழமையானவன் என்பது பொருள். இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பர். இன்று நடைபெற்ற ஒரு செய்தி சில ஆண்டுகளில் வரலாருகப் பேசப்படும். அதுவே, காலம் அறியமாட்டாப் பழமையுடையதாயின் புராணம் எனப்படுகின்றது. நமது புராணங்கள் நடந்தவைகளையே அழகூட்டி உரைக்கின்றன. இவை கற்பனையல்ல என அறிதல்வேண்டும்.

குமரகுருபரரும் இறைவன் தூய நெஞ்சில் உறைபவன் என்பதனை விளக்க மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில்,

"அகந்தைக் கிழங்கை அகழ்ந் தெடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே"

என விளக்கினர். ஆணவத்தை அகற்றிய நெஞ்சில் இறைவனின் அருள் வடிவாகிய அம்மை எழுந்தருள்வாள் என்கிருர். இறைவனும் தூய உள்ளத்தில் வீற்றிருக்கிருர் என்பதும், இணைபிரியா இறைவியும் தூய உள்ளத்தில் வீற்றிருக்கிருள் என்பதும் சுவைத்து மகிழத்தக்கது.

யாவும் இறைவன் உடைமை :

உலகத்தில் எல்லாப் பொருள்களும் இறைவனுக்கே உரித்தானவை. இதனை, "ஈசாவாசியம் இதம் சர்வம்" என்ற உபநிடத சுலோகம் விளக்குகின்றது. உலகியலில், நம்மிடம் உள்ள சொத்துக்கள் யாவும் இறைவனுக்கே உரியன. அதனைப் பாதுகாப்பதும், இறைவன் திருவுள்ளக்குறிப்பின்வழி அதனை

வழங்குவதுமே நமக்குள்ள உரிமை. சொத்துக்களைப் பொறுத்தவரை நாம் உரிமையாளர்கள் அல்லர்; அறங்காவலர்களே. ஓரளவுக்கு, அதனை நாம் அனுபவிக்கலாமேதவிர உரிமை கொண்டாடுதல் இயலாது. இதனைத் தாயுமானுர், "எல்லாமும் உன்னடிமையே' எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய செயலே; எங்கணும் வியாபிநீ" என்பார் அடிமை என்பது உயிர்களைக்குறிக்கும். உடைமை என்பது அஃறிணையாகிய ஏனைப் பொருள்களைக் குறிக்கும். உலகத்து உயிர்களும், பிறவுமெல்லாம் இறைவனுக்கே உரியன என்பதனை இதனுல் உணரலாம். இறைவன் நம்மிடம் செல்வங்களை வழங்கியுள்ளான். இவை நாமேவைத்து அனுபவிப்பதற்கு அன்று. ஏனையோர்க்கு வழங்கவே என்பார் அப்பர்பெருமான்.

"இரப்பவர்க்கு ஈயவைத்தார்"

அவ்வாறு கொடுத்த இறைவன், அவர்கள் உள்ளத்தில் கருணையினையும் வழங்கினுன்.

"ஈபவர்க்கு அருளும்வைத்தார்"

இங்ஙனம் இறைவன் உடைமையினை, அவன் திருவுள்ளப்படி வழங்கி வாழாவிடின் இறைவனது தண்டனை கட்டாயம் உண்டு என்பதனைக்,

"கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்"

என்று விளக்கியருளினுர். நரகம் என்பது மறுமையில் என்பது மட்டுமன்று. இம்மையிலேயே அதற்குரிய துயரங்கள் வந்து சேரும் என்பது கருத்து. உலகியலிலும் இதனை அறியலாம். இக்கருத்துக்கள் அடங்கிய ஈசாவாசிய உபநிடதம் தான் காந்தியடிகளைச் சமயநெறியில் அதிகம் ஈடுபடுத்தியது என்பர்.

ஆண்டவன் இடத்தில் அரசு :

ஆண்டவனின் பிரதிநிதியே அரசு. சொத்துக்கள் யாவும் அரசுக்கே உரியன. நம்மில் பலர் இதனை உணர்வதில்லை. நாம் நிலவரி முதலியன அரசுக்குச் செலுத்துவதன் நோக்கமே அதுதான் என்பதனை உணரவேண்டும். அவற்றை உழுது பயிரிட்டு அனுபவித்துக் கொள்ளவே வரிகள் செலுத்துவதும் லைசன்ஸ் போன்ற உரிமை பெறுவதும் என்பதனை உணர வேண்டும். எல்லாரும் எல்லார்க்கும் வழங்கி வாழவேண்டு

மென்ற இவ்வுயரிய சிவநெறி சமுதாயத்தில் வேரூன்றினால் நாடு பகையின்றி அமைதி பெற்று வாழும். இதனைச் சட்டத்தால் சாதிக்க நினைக்காமல், மக்கள் உள்ளத்தினைப் பண்படுத்தி அன்பால் சாதிக்கவேண்டும். எல்லோரிடமும் செல்வம் பரவலாக இல்லாது சிலரிடம் மட்டும் இருப்பதன் காரணமும் ஆழ்ந்து நோக்கினால் விளங்கும். தரமற்றவர்களிடம் செல்வம் இருந்தால் உலகைக் கெடுப்பதோடு பொறுப்பின்மையால் தங்களையும் கெடுத்துக்கொள்வர். இறைவன் தக்கார் கையில் பொருளை வழங்கியதன் நோக்கம், அதனைப் போற்றி வாழத் தெரியாதவர்களைப் பாதுகாப்பதற்கேயாம் என்பதை உற்று நோக்கினால் உணரலாம்.

நலம் பெருக :

இவ்வாறான உயரிய இறைமியல்புகள் பலவற்றைச் சிந்திப்பதற்கு இவ்விழா உதவியது. குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், சமய – சமுதாய நல்லறப் பணிகள் பலவற்றில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு நாட்டுக்கும், சமுதாயத்திற்கும், சமயத்திற்கும் ஒல்லும்வகை தொண்டாற்றி மேலும் மேலும் சிறக்கவும், இத்திருக்கூட்டத்தைக் கட்டிக்காத்துவரும் அன்பர்களுக்கு நலம் பல பெருகவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிறுவர் பகுதி :- உங்கள் திறமைக்கோர் சோதனை !

(வி. சா. கு.)

முள்ளம் பன்றியை நாய் பிடித்த கணக்கு

(5) ஒரு முள்ளம்பன்றி நாள் ஒன்றுக்கு 30 கிலோமீட்டர் ஓடுகிறது. அதனைத் துரத்திச் செல்லும் நாய் முதல் நாள் 1 கிலோமீட்டரும், 2-ஆம் நாள் 2 கி. மீட்டரும் மூன்றாம்நாள் 3 கி. மீட்டரும், நாளுக்குநாள் 1 கி. மீட்டர் அதிகமாக ஓடித் துரத்திச் செல்கிறது. நாய் பன்றியைப் பிடிக்க முடியுமா? முடியுமானால் எத்தனை நாளில் பிடிக்கும்?

பொங்கல் வாழ்த்து

தருமையாதீனப் புலவர்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன், M. A, P.hd.

ஆண்டுதொறும் வந்தாலும் பொங்கலே! நீ
அளிக்கின்ற இன்பத்தைப் பாட்டி ஞலே
மீண்டும்யாம் உரைக்கின்ருேம்; மகிழு கின்ருேம்!
மென்மேலும் உழைத்திடவே மனங்கொள் கின்ருேம்!
தூண்டுகின்ற புதுமைகளைத் துலக்கு வாய்நீ!
தோன்றுகின்ற நலம்பலவும் விளக்கி நிற்பாய்!
ஈண்டுகின்ற தைத்தலைநாள் இன்பம் தந்தாய்!
இதயத்தால் வாழ்த்துகின்ருேம், வாழி பொங்கல்!

அன்பென்ற உலைநீரில் பண்பாம் நல்ல
அரிசியிட்டு வாழ்வென்னும் அடுப்பில் ஏற்றி
இன்பென்ற பொங்கலிஞல் மகிழ்ச்சி பொங்கி
எல்லோரும் மகிழ்கின்ற பண்புப் பொங்கல்
முன்வந்த தென்றேயாம் திளைக்கின் ருேமே!
முத்தமிழின் நலம்வாழச் சமயம் வாழ
நன்னெறியின் வளம்சிறக்க வந்த பொங்கல்!
நாவார வாழ்த்துகின்ருேம், வாழி வாழி!

மூவர்தமிழ், வாசகத்தேன், அனைத்தும் கூட்டி
மூவாத குருஞான சம்பந்தர் சொல்
பாவமுதத் திறங்கூட்டி, இருபத் தாரும்
பரிவாரும் எந்தலைவர் உரையும் சேர்த்தே
ஆவலுடன் மனமெல்லாம் பொங்கி நிற்க
அருள்ஞான சம்பந்தம் பொங்கல் ஆக்கும்!
யாவருமே வாரீரோ! கலந்துண் போமே!
யாண்டும்நம் நெறிவாழ வாழ்க பொங்கல்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

சென்னை, தமிழிசைச் சங்கத்தின்
முப்பத்துநான்காவது ஆண்டு விழாவிற்கு

அனுப்பியருளிய

வாழ்த்துச் செய்தி

தமிழ் வளர்த்த கலைகள் மூன்று, அவை இயல் இசை நாடகம் எனப்படும். இம் முக்கலைகளையும் சிறப்பாகப் போற்றி வளர்த்த காரணத்தால் தமிழ்மொழி முத்தமிழ் எனப் பெயர் பெற்றது. தமிழ்மொழியால் வளர்க்கப்பெற்ற இசை தமிழிசை எனப்பெறும். இத்தமிழிசை சங்க காலத்திலேயே சிறப்புற்று ஓங்கியது என்பதற்குச் சங்க நூல்கள் சான்று பகர்கின்றன. சங்க காலத்திற்குப் பிறகு காரைக்காலம்மையார் திருஞானசம்பந்தர் போன்ற சமயாசாரியப் பெருமக்கள் தமிழிசையைப் போற்றி வளர்த்தனர். அவர்கள் வளர்த்த தமிழிசை அவர்கள் காலத்திற்குப்பின் தேவார இசை என்று வழங்கப்பெற்றது. கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் சாரங்கதேவர் தென்னாட்டில் வழங்கிய இசையைத் தேவாரவர்த்தனி எனக் குறித்துள்ளமையாலும் இதனை அறியலாம்.

சங்க காலத்தில் தமிழிசையாகவும் இடைக்காலத்தில் தேவார இசையாகவும் விளங்கிய தமிழிசை பிற்காலத்தில் தெலுங்கு கன்னடம் முதலிய தென்னாட்டு மொழிகளிலும் இயைபுடையதாய்க் கலந்து கர்நாடக இசை என வழங்கப் பெறுவதாயிற்று. கர்நாடகம் என்பதற்குத் தொன்மை வாய்ந்தது என்பது பொருள். இவ்வரலாற்று முறை புரியாதவர்கள் கர்நாடக இசை வேறு தமிழிசை வேறு எனக் கருதுகின்றனர். தமிழிசைதான் தேவார இசை என்றும், கர்நாடக இசை என்றும், சிறு சிறு

மாற்றங்களுடன் வளர்ந்து வந்திருக்கிறது என்பதை இப்பெரு விழாவில் மக்கட்கு நினைவூட்ட வேண்டுவது இன்றியமையாததாகும்.

தமிழிசையின் பெருமையைத் தரணியெங்கும் பறைசாற்றத் திருமடங்களின் ஆதரவுடன் அண்ணாமலையரசரால் முப்பத்து நான்கு ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பட்டது தமிழிசைச் சங்கம் என்பதை அனைவரும் அறிவர். அப்பணியை நாளும் சிறப்புடன் வளர்த்துவரும் தமிழிசைச் சங்கத்தின் முப்பத்து நான்காம் ஆண்டு விழா எல்லா வகையாலும் சிறப்புற்றுத் திகழவும் இவ்விழாவில் பங்கு பற்றும் அன்பர்கள் பலர்க்கும் நலம்பல பெருகவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் நள ஆண்டு தைத் திங்கள் 22 ஆம் நாள் (4—2—77) வெள்ளிக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருப்பந்தணைநல்லூர் அருள்மிகு காம்பன்னதோளியம்மை உடனாகிய அருள்மிகு பசுபதிநாதர் திருக்கோயிலிலும், திருக்கஞ்சனூர் அருள்மிகு கற்பகநாயகி உடனாகிய அருள்மிகு அக்கினீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். அவ்வமயம் திருப்பந்தணைநல்லூர் திருக்கஞ்சனூர் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெறுவதுடன் திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப் பெறும். அன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக. அன்று ஆதீனப்பல்கலைக் கல்லூரி மாணவர்கள் உழவாரப்பணி செய்வார்கள்.

தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,
திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

திருக்கடம்பூர்

சோழவள நாட்டில் பாடல்பெற்ற சிவதலங்கள் 274. அவற்றுள் காவிரியின் வடகரைத்தலங்களாக விளங்குவன 63. திருக்கடம்பூர் வடகரைத் தலங்களில் 34 வது தலமாகத் திகழ்வது இத்தலம் சிதம்பரம் தாலூகாவில் காட்டுமன்னார் குடிக்கு வடமேற்கே 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்குடி வழியே எய்யலூர் பேருந்தில் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய சமய குரவர் நால்வரும் பக்தியோடு பாடிப்பரவிய திருத்தலம். அருணகிரிநாதர், இராமலிங்க அடிகள் முதலிய அருளாளர் பலரும் இத்தலத்தைப் போற்றிப் பரவியுள்ளனர். இந்திரன் வழிபாடு செய்து அமிர்த கலசம் பெற்ற சிறப்பும் முருகப் பெருமான் இறைவனை வழிபட்டு சூரனை அழித்தற்கு வில் பெற்ற பெருமையும் இத்தலத்திற்கு உண்டு. அங்காரகன் வழிபட்டு அருள் பெற்ற தலமாதலால் இத்தலத்துப் பெருமானை வழிபாடு செய்வோர் அங்காரக தோஷம் நீங்கி நலம் பெறுதல் கண்கூடு. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் வாழ்ந்தும் வழிபட்டும் நலம்பெற்றுள்ளனர்.

இறைவர் திருப்பெயர் : அருள்மிகு அமிர்தகடேசுவரர். இறைவி திருப்பெயர் அருள்மிகு சோதிமின்னம்மை. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம்ஒன்றும் திருநாவுக்கரசர் பதிகம் இரண்டும் ஆக மூன்று பதிகங்கள் உள்ளன.

கடம்பு இத்தல மரமாதலின் கடம்பூர் எனப் பெயர் பெற்றது. இவ்வூர் கீழைக் கடம்பூர் மேலைக்கடம்பூர் என

இரு பிரிவுகளுடையது. பாடல்பெற்ற கோயில் மேலைக் கடம்பூரில்உள்ளது. இங்குள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்றுபெயர். 'தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்' என்னும் இத்தலத் தேவாரத் தொடர் இதனைத் தெரிவிக்கின்றது.

கோயில் வகைகள் :

பாடல் பெற்ற கோயில்கள் ஈசுவரம், பெருங்கோயில், ஆலக்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், தூங்கானை மாடம் முதலிய பல பெயர்களைப் பெற்றிருந்தன என்பதைத் தேவாரத் திருப்பதிகங்களால் உணரலாம்.

சைவ சமய வளர்ச்சி என்னும் நூலில் டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனூர் கோயிற் பெயர் விளக்கங்களைப் பின்வருமாறு குறித்துள்ளார்.

(1) பெருங்கோயில் என்பது மாடக்கோயில் என்னும் பெயர்பெறும். அது செய்குன்றின் மேல் கட்டப்பட்டது. அப்பர் காலத்தில் 78 பெருங்கோயில்கள் இருந்தன. பெருங் கோயில்கள் கோச்செங்கணன் எடுப்பித்தவை. இதனைத் திருமங்கையாழ்வார் வாக்கால் உணரலாம். (2) ஞாழற் கோயில் என்பது ஞாழல்மரம் இருக்கப்பெற்ற கோயிலாகும். திருப்பாதிரிப்புலியூர்க்கோயில் ஞாழற்கோயில் எனப்பெயர் பெற்றிருந்தது. (3) கொகுடிக்கோயில் என்பது கொகுடி என்னும் ஒருவகைமுல்லைச்செடிகள் நிறைந்த இடத்தில் அமைந்த கோயில் எனப்பொருள்படும். திருக் கருப்பறியலூரில் (தலைஞாயிறு) உள்ளகோயில் இப்பெயரை உடையது. (4) ஆலக்கோயில் என்பது ஆலமரத்தைத் தலமரமாகப்பெற்றகோயில்என்றுகூறலாம். திருக்கச்சூரில் (செங்கற்பட்டுக்கு அருகில்) உள்ளகோயில் இப்பெயரைப் பெற்றுள்ளது. (5) இளங்கோயில் என்பது பழைய கோயிலைப் புதுப்பிக்குங்கால் அதற்கு அண்மையில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபாடு செய்யும் கோயிலாகும். சேய்மையில் உள்ளார் தாம் வழிபடும் கடவுளைத் தம்மூர்க்கு அணித்தாக எழுந்தருளுவித்து எடுப்பித்த கோயிலும் இளங்கோயிலாகும். (கடம்பூர் இளங்கோயில் திருமீயச்சூர் இளங்கோயில் போல்வன) (6) கரக்கோயில் என்பது தேர்வடிவமாகச்சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயிலாகும்; கடம்பூர் கோயில் இவ்வாறு இப்பெயரைப்

பெற்று விளங்குகிறது. (7) மணிக்கோயில் என்பது மணிகள் பரப்பினாற் போன்ற மேற்கூறை அமைப்புடைய விமானம் கொண்ட கோயிலாகலாம் என்று அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் கருதுகிறார். (8) தூங்கானைமாடம் என்பது வராகமிஹிரர் குறித்துள்ள பலவகை விமானங்களில் கஜப்பிரஷ்ட விமானம் கொண்ட கோயிலாகும். பெண்ணாகடம் கோயில் தூங்கானைமாடம் எனப் பெயர் பெற்றது. பல்லவர் காலத்தில் இத்தகைய கோயில்கள் பல கட்டப்பட்டன. அவற்றுள் திருத்தணிகைக் கோயிலும் ஒன்றாகும். (9) ஈசுவரம் என்பது சிவன் கோயிலின் பொதுவான பெயராகும்.

கரக்கோயில் :

இத்தலக் கோயிலுக்குக் கரக்கோயில் எனப் பெயர் பெற்றமைக்கு காரணமாகப் பின்வரும் புராண வரலாறும் கூறப்பெறுகிறது.

‘இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன் உலகிற்குக் கொண்டுபோக நினைத்துப் பாதாளம் வரை தன் கரங்களால் அகழ்ந்தெடுக்கமுயற்சித்தான். கோயிலின் அடிப்பகுதி அதற்கு அப்பாலும் சென்றது கண்டு அஞ்சி முன்போல அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம்பெற்றனன் என்றவரலாறு கருதிக் கரக்கோயில் எனப் படும் என்பர்’ என்று சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தாம் எழுதிய பெரியபுராண உரையில் குறித்துள்ளார்.

இளங்கோயில் :

இக்கடம்பூருக்குக் கிழக்கே 2 கிலோமீட்டர் தூரத்தில் கீழைக்கடம்பூரில் கடம்பூர் இளங்கோயில் இருக்கிறது. இது அப்பர் தேவாரத்தில் இடம்பெற்ற வைப்புத் தலமாகும். கோயில் முற்றிலும் இடிந்துபோயுள்ளது. கருவறையின் மூன்றுபுறச்சுவர்களிலும்உருவச்சிலைகள்வைக்கப்பட்டிருந்த புரைகள் உள்ளன. அவற்றில் சிலைகள் இல்லை. புரைகளின் கீழ் அங்கு வைக்கப்பட்டிருந்த சிலைகளின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. (1) ஆனை உரித்ததேவர், (2) இலிங்கபுராணதேவர், (3) சந்திரசேகரதேவர், (4) சந்தியா நிருத்ததேவர், (5) காலதேவர், (6) அர்த்தநாரீசதேவர், (7) ஆனையாண்டதேவர், (கணபதி) (8) அறுவர் அமுதை ஆண்டார்

(சுப்பிரமணியர்) (9) உலகாண்டமூர்த்தி (மூர்த்திநாயனர்) (10) முருகாண்டார் (முருகநாயனர்) (11) திருக்குறிப்புத் தொண்டர், (12) தண்டிப்பெருமான் என்ற பெயர்கள் அப்புரைகளின் கீழ் குறிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் இக்கோயில் சிற்பச் சிறப்போடு மக்கள் மனத்தைக் கவர்ந்த திருக்கோயிலாக விளங்கியிருத்தல் வேண்டும்.

சிற்பச் சிறப்பு :

மேலைக்கடம்பூர்க் கோயில் நான்கு சக்கரங்களோடு குதிரைகள் பூட்டிக் கிழக்குநோக்கி நிறுத்தப் பெற்ற தேர் வடிவில் விளங்குகிறது. கருவறையின் புறச்சுவர்களில் மிகப்பழமையான சிற்பங்கள் செறிந்துள்ளன. நவக்கிரகங்கள் சிவலிங்கங்களை வழிபாடு செய்யும் காட்சியைச் சித்தரிக்கும் சிற்பங்கள் மூன்று புறங்களிலும் உள்ளன. கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களிலும் புறச்சுவர்களிலும் கன்னி விநாயகர், அர்த்தநாரீசுவரர், அகத்தியர், தக்ஷிணமூர்த்தி, உமாமகேசுவரர், துர்க்கை திருவுருவங்கள் உள்ளன. கருவறையின் அடிப்பகுதியில் நாயன்மார் வரலாறுகளை விளக்கும் வரிச்சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் காரைக்காலம்மையார் தலைகீழாக நடந்து செல்லுதலைக் குறிக்கும் சிற்பம் மிக்க அழகுடையது.

கோயிலமைப்பு :

காட்டுமன்னார்குடியிலிருந்து எய்யலூர் செல்லும் பேருந்துச்சாலையில் இத்தலம் உள்ளது. மேலைக்கடம்பூர் என்று குறிப்பிடுமிடத்தில் இறங்கி தெற்கே சென்றால் கோயில் வாயிலை அடையலாம். கிழக்கு நோக்கிய கோயில் மூன்று நிலைக்கோபுரம் கோயிலை அணி செய்கிறது. நாட்டுகோட்டை நகரத்தார் திருப்பணி, கோயில் மிக்க அழகோடு திகழ்கிறது.

இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் மகாமண்டபத்தை அடையலாம். கோயிலை வலமாக வரும்போது கருவறைப் புறச்சுவர் நம் கருத்தைக்கவர் கிறது. கருவறையின் புறச்சுவரில் உள்ள கோஷ்டங்களில் உமாமகேசுவரர் அர்த்தநாரீசுவரர், கன்னி விநாயகர், தக்ஷிணமூர்த்தி திருவுருவங்கள் உள்ளன. மேலைத் திருச் சுற்றில் உள்ள மண்டபத்தில் விநாயகர், சமயாசாரியர், ஆறுமுகர் திருவுருவங்களும் அருள்மிகு பாபகரேசுவரர்

மீனாட்சியம்மை கோயிலும் மகாலக்ஷ்மி திருவுருவமும் உள்ளன. கர்ப்பக்கிருகத்தில் இலிங்கோற்பவர் இருக்குமிடத்தில் திருமாலும் வடபுறம் கோமுகையில் நான்முகனும் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் துர்க்கை சண்டிகேசுவரர் கோயில்கள் உள்ளன.

மகாமண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபத்தை அடைந்ததும் அருள்மிகு அமுதகடேசுவரர் சந்நிதியை அடைகின்றோம்.

“ வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர் தொழப்படுவானைக்
கானமரும் பிணை புல்கிக் கலைபயிலும் கடம்பூரில்
தானமர் கொள்கையினானைத்தாள்தொழவீடெளிதாமே”

என்று ஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரப்பாடல் நம் சிந்தனையில் முகிழ்க்கிறது. சமய உலகிலும் தமிழுலகிலும் வழங்கும் ‘ என்கடன் பணிசெய்து கிடப்பதே ’ என்ற புகழ் பெற்ற தேவாரத் தொடரைக் கொண்ட இத்தலத்திறைவர் மீது அப்பர் பாடிய திருப்பாட்டு நம் மனத்தில் இழையோடுகிறது.

“ நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே ’’

என்ற பாடலைச் சொல்லி இறைவனை நினைந்து வழிபடுகின்றோம். பஞ்ச மூர்த்திகளின் திருவுருவங்களும் நடராஜர் சிவகாமி அம்மை திருவுருவங்களும் உள்ளன. மகா மண்டபத்தை அடைந்தவுடன் அம்பாள் அருள்மிகு சோதி மின்னம்மை சந்நிதி. நலம் பலவற்றையும் தந்தருளும் அவ்வம்மையை வழிபட்டுப் புகழ்பெற்ற திருக்கோயிலைத் தரிசித்து இறைவன் திருவருட் பேற்றுக்கு உரியவராகும் மன நிறைவை நாம் பெறுகின்றோம்.

தீர்த்தம் – இவ்வாலயத்திற்கு மேற்கே ½ கி. மீ. தூரத்தில் சக்தி தீர்த்தம் உள்ளது.

பாண்டிய மன்னன் ஒருவன் தன் தந்தையின் அஸ்தியைக் காசிக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் இத் தலத் தீர்த்தமாகிய சக்தி தீர்த்தத்தில் வைத்துப் பூசை

செய்தான். இத் தீர்த்தம்பட்டதால் அஸ்தி மலமாக ஆயிற்று. அஸ்தியைக் காசிக்கு எடுத்துச் செல்லாமல் இத்தீர்த்தத்திலேயே வைத்து இறைவனை வழிபட்டு ஊர் திரும்பினன். இன்றும் சுற்றியுள்ள ஊரில் உள்ளவர்கள் இங்கு அஸ்திகரைத்து வருகின்றூர்கள். தலமரம் — கடம்பமரம். இன்று காணப்படவில்லை.

புராண வரலாறு :

இந்திரனுடைய தாய் இத்தலத்திறைவரைப் பக்தி செய்து வழிபட்டு வந்தாள். நாடோறும் விண்ணுலகத்திலிருந்து இத்தலத்திற்கு வந்து வழிபடும் கடமையை மேற்கொண்டு வாழ்ந்து வந்தாள். தாயின் முதிய நிலையையும் அவள் இத்தலத்திறைவர் மேல் கொண்டுள்ள பக்தியையும் அறிந்த இந்திரன் இக்கோயிலை இந்திரலோகத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பிக் கர்ப்பக்கிருகத்திற்குச் சக்கரங்கள் கட்டி குதிரைகளைப் பிணைத்து இழுக்க முயற்சித்தான். அவசரத்தில் விநாயகரை மறந்தான். விநாயகர் தன் பெருவிரலால் தேரை அழுத்திஞர். தேர் சிறிது சாய்ந்து நின்றது. இந்திரன் பிழையை உணர்ந்து வணங்கி அம்முயற்சியைக் கைவிட்டு இறைவனைப்படி கோடிலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு அருள் பெற்றுன். இத்தல விநாயகர் வலக்காலை ஊன்றிய நிலையில் விளங்குகிறூர் கோயில் நிலையும் சிறிது சாய்ந்துள்ளது எனக் கூறுகின்றனர். கீழக்கடம்பூர்க் கோயில் இந்திரனுல் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. சுவாமி பெயர் ஸ்ரீ ருத்ர கோபீஸ்வரர்.

பாடல்கள் :

திருஞானசம்பந்தர் அப்பர் பாடிய திருப்பதிகங்கள் மூன்றுள்ளன. சுந்தரர் ‘காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே” என ஊர்த் தொகையுள் குறிப்பிட்டுப் பாடியருளுகின்றூர். மணிவாசகர் போற்றித் திருவகவலுள் கடம்பூர் மேவிய விடங்கா போற்றி ’ எனக் குறித்தருளுகின்றூர் இராமலிங்க சுவாமிகள்,

‘ உடம்பூர் பாவத்தை யொழித்தருளும் மேன்மைக்
கடம்பூர் வாழ் என்னிரண்டு கண்ணே ’

என்றும் அருணகிரிநாதர் ‘ காவேரி சேரும் ஒண்சீருறு சூழ் கடம்பூர்... தேவர் பெருமானே’ என்றும் இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பணி :

நாட்டுக்கோட்டை நகரத்தார் தென்னாட்டில் பாடல் பெற்ற பல சிவாலயங்களைப் பெரும் பொருட் செலவில் திருப்பணிகள் செய்வித்த புண்ணியப் பேறுடையவர்கள். இம்மரபினருள் தோன்றிய அருணசலம் செட்டியார் இத் திருக்கோயில் திருப்பணியைச் செய்வித்த புண்ணியப் பேறுடையவர். அவர் இக்கோயில் பணியைச் செய்த காரணத்தைக் கதையாக அன்பர்கள் பலர் இன்றும் கூறி வருகின்றனர்கள்.

காட்டுமன்னார்கோயில் சரவணப்பிள்ளை என்பவர் தேவகோட்டை சென்று அருணசலம் செட்டியாரைக்கண்டு கடம்பூர்க்கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது என்றும் அதனைத் தாங்கள் திருப்பணி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். செட்டியார் பார்க்கலாம் என்று சொல்லிப் பிள்ளையை வழியனுப்பிவிட்டார்.

சில மாதங்கள் கழித்துச் செட்டியார் திருக்கூடலையாற் றூர்க்கோயிலைப் பெரும் பொருட்செலவில் கருங்கல் திருப் பணியாகச் செய்விக்கும் கருத்தோடு மாட்டு வண்டியிலேறி அத்தலத்திற்குப் புறப்பட்டார். இரவு நேரம் வண்டியில் உறங்கிய செட்டியார் கனவில் கடம்பூர் இறைவன் தமது கோயிற் பணியைச் செய்யுமாறு கூறிமறைந்தார். ஓட்டுநர் உறங்கியதால் வண்டி கூடலையாற்றூர் செல்லும் வழியிலிருந்து மாறி கடம்பூரை அடைந்தது. இளங்காலை நேரம். கனவு கண்டு விழித்த செட்டியார் கடம்பூர் இறைவர் தம்மை தடுத்தாட்கொண்டதை அறிந்து வியந்து அன்றே கால்கோள்விழா நிகழ்த்தித் திருப் பணிகள் புரிவித்தார். பின்னர் அவர் மரபில் தோன்றிய சோமசுந்தரம் செட்டியார் மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினர். பின் 23 ஆண்டுகள் கழித்து அவர் மரபினர் அருணசலம் செட்டியார் அஷ்டபந்தனம் செய்வித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்துள்ளார்.

தற்பொழுது இராஜகோபுரத்தையும் மற்றும் பழு தடைந்துள்ள பகுதிகளையும் திருப்பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருப்பணிக்குழு அமைத்து திருப்பணிகள் செய்யப்பெற்று வருகின்றன.

ஆதிசங்கரரும் திரவிடசிசுவும்

மும்மொழிக்கொண்டல்

திரு. பெ. திருஞானசம்பந்தன்.

வரலாற்றுசிரியர்கள் ஆதிசங்கரரின் காலத்தை கி. பி. எட்டாம் நூற்றுண்டெனக் கொள்வர் அதற்குச் சான்றுக ஆதிசங்கரரின் தோத்திர நூலாகிற 'சௌந்தர்ய லஹரியில்' 75 ஆவது சுலோகத்தில் வருகிற 'த்ரவிடசிசு' என்ற சொல் ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஞானசமபந்தப் பெருமானைக் குறிப்பதாக எடுத்துக்காட்டுவர். இச் சுலோகம் வருமாறு :—

தவ ஸ்தன்யம் மந்யே தரணிதரகந்யே ஹ்ருதயத:
பய: பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு: ஆஸ்வாத்ய தவ யத்
கவீனும் ப்ரௌடானும் அஜநி கமநீய: கவயிதா.

இதன் பொருள் :– 'மலைமகளே! உன் மார்பகத்திலிருந்து பெருகிய பாலைக் கருணையோடு தரவும், அதைப்பருகிய திராவிட நாட்டுக் குழந்தை, கவியரசர்களும் மகிழ்ந்து போற்றும் கவியானுல், உன் பால் இதயத்தினின்றும் பொங்கிப்பெருகும் ஞானப்பாற்கடலோ என எண்ணுகிறேன்.'

'திரவிடசிசு' என்ற சொல் ஆதிசங்கரரையே குறிக்கும் என சில உரைகாரர்கள் கூறுகிருர்கள். அவர்கள் கூறும் வரலாறு பின்வருமாறு:— 'சங்கராசாரியருடைய தந்தை பரமேசுவரீ பக்தர். தினந்தோறும் அம்பாளின் கோயிலுக்குச் சென்று, அம்பிகைக்குப் பாலபிடேகம் செய்து பூஜை நிவேதனம் ஆகிய வற்றை முடித்துக்கொண்டு எஞ்சியுள்ள பாலைத் தன்னுடன் அழைத்துச் சென்ற குழந்தை சங்கரனுக்கு கொடுப்பது வழக்கம். 'அம்பிகை நிவேதிக்கப்பட்ட பாலில் பெரும் பகுதியைப் பருகிவிட்டு சிறிதளவு பாலைத்தானே தனக்கு மீதி வைக்கிருள்' என்று எண்ணி வந்தது அக்குழந்தை. ஒரு நாள் வெளியூர் செல்லவேண்டியிருந்த அவ்வேதியர் தன் மனைவியிடம் தான் திரும்பிவரும்வரை அம்பிகைக்குப் பூசைசெய்யச் சொல்லிவிட்டுச் சென்ருர். ஒருநாள் தான் திருக்கோயிலுக்குச் செல்ல இயலாத

நிலை ஏற்பட்டபோது, தன்மைந்தனை சங்கரனைப் பூசை செய்து வருமாறு தாயார் பணித்தார். அக்குழந்தையும் அம்மையே பாலைத் தினம் பருகுவதாக எண்ணிவந்ததால் அன்று பாலைப் பருகும்படி அம்மையை வேண்டியது. அம்பிகையாகிற மூர்த்தி பாலைப் பருகாததைக் கண்டு ஏமாற்றமடைந்து அக்குழந்தை அழுதது. அம்பிகையும் பாலனைத்தையும் பருகிவிட்டாள். தனக்கு வழக்கம்போல் மிச்சம் பாலை அம்பிகை வைப்பதாகக் கருதிய குழந்தை மிச்சம் பால் இல்லாததைக் கண்டு மீண்டும் அழத் தொடங்கிற்று அம்பிகையின் கருணை சுரந்தது. தானே உவந்து அக்குழந்தைக்கு முலைப்பாலை ஊட்டினள். அக்கணமே அக்குழந்தை கவிதை மழை பொழியத் தொடங்கிவிட்டது'

மற்றொரு வரலாறும் உண்டு. ' ஆறு மாதக் குழந்தை சங்கரனின் தந்தை ஓர் ஏழை பிராமணர். ஒரு நாள் அவர் பிட்சைக்காக வெளியே சென்றிருந்தார். தாயும் நீர் முகந்துவர நதிக்குச் சென்றுவிட்டாள். வீட்டு வெளி முற்றத்தில் குழந்தை தனியே அழுதுகொண்டிருந்தது. தற்செயலாகப் பரவசிவனுடன் வானவெளியில் சென்றுகொண்டிருந்த பார்வதீ தேவியின் செவியில் ஓலக்குரல்விழுந்தது. விரைந்து இறங்கிவந்து குழந்தையின் கண்ணீரைத் துடைத்து முலைப்பாலை அருந்தச்செய்த பின்னர் சென்றுவிட்டனர் பெருமானும் பெருமாட்டியும். அன்று தொடங்கி அக்குழந்தை தோத்திரங்களையும் சாத்திரங்களையும் இயற்றத் தொடங்கிவிட்டது. இவ்வரலாறுகள் காஞ்சியிலே வழங்கிவந்தன என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய வரலாறுகள் சௌபாக்யவர்த்தனீ, அருணமோதினீ, ஆனந்தகிரீயா ஆகிய சௌந்தர்யலஹரி உரைகளில் தரப்பட்டுள்ளன. பின்னிரண்டில் சாபத்தினல் நிலவுலகில் பிறந்த கார்த்திகேயனே இக்குழந்தைஎன்றும் கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட இரண்டாவது வரலாற்றைக் கூறும் 'தாத்பர்யதீபினீ' 'டிண்டிமபாஷ்யம்' ஆகிய உரைகளில் இக்குழந்தை காஞ்சியில் பிறந்த சம்பந்தன் என்று கூறப்பட்டுள்ளது. இங்கும் ஆறுமாத வயது நிரம்பிய குழந்தை சாபத்தினல் மானிடப் பிறப்பெய்திய கார்த்திகேயனே என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் காஞ்சியிலே வழங்கிவந்த வரலாறு என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வுரைகாரர்கள் கூறும் 'சம்பந்தன்' சீகாழியில் அவதரித்து அம்மையப்பனின் அருளுக்குப் பாத்திரமாகி ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தரா என்பது சிந்தித்தற்குரியது.

இப்பாடலில் குறிப்பிடப்படும் ' த்ரவிடசிசு ' சைவசமயாசாரியருள் முதல்வரான ஞானசம்பந்தராக இருப்பதற்குப் பெரிதும் வாய்ப்புண்டு.

(1) ' ஆப்தவாக்யம் பிரமாணம் ' என்பர். இன்று காஞ்சி காமகோடி பீடாதிபதியாக எழுந்தருளியுள்ள முதிய ஆசாரிய சுவாமிகள் கருத்து, ' த்ரவிடசிசு ' சீகாழி ஞானசம்பந்தப் பெருமானைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்பதாகும்.

(2) இறைவியினிடத்தில் மிகுந்த பக்திபூண்டுள்ள சங்கரர் நூலினிறுதியில் ' நீ அளித்த பிச்சையான சொற்களால் இயற்றப் பட்ட இப்பாமாலையால் உன்னை யான் துதிப்பது, தீவட்டியின் ஒளிகொண்டு கதிரவனுக்குக் கற்பூரம் காட்டுவது போலும் ' என்று மிகுந்த அடக்கத்துடன் கூறுவதால் அவர் தன்னையே ' த்ரவிடசிசு ' என்று ' திராவிட தேசத்திற்கே சிறப்பைத்தந்த குழந்தை ' என்று பாராட்டிக் கொள்வாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

(3) வெளிவந்துள்ள ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்களில் இவ்வற்புத நிகழ்ச்சி ஏற்பட்டதாகக் குறிக்கப் படவில்லை.

(4) இந்நூலை மொழிபெயர்த்த கவிராஜபண்டிதர் ' த்ரவிட சிசு ' என்பதைக் ' கவுணியன் சிறு மதலை ' என்ற தொடரால் குறிப்பிடுவதால் சேக்கிழாரால் ' கவுணியர் கோத்திரம் விளங்கச் செப்புநெறி வழிவந்தார் சிவபாதவிருதயரின் புதல்வரான காழிவேந்தரையே இது குறிப்பிடுகிறது ' என்று கருத இடமுண்டு.

(5) பக்தியின் முடிமணியாகத் திகழ்ந்த கண்ணப்பரைச் சிவானந்தலஹரியின் 63 ஆம் பாடலில் ' வனசரன் ' (வேடன்) என்று பொதுவாகக் குறிப்பிட்டு உய்த்துணரவைத்தது போலவே சௌந்தர்யலஹரியில் ' த்ரவிடசிசு ' என்று ஞானசம்பந்தரைக் குறிப்பிட்டு அன்னையின் அருட்பெருக்கைப் போற்றியுள்ளார் என்று கொள்வது பொருத்தமேயன்றோ?

" அண்டத்து அரும்பெறல் மேகன் "

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M, A., M. O. L.,

(மலர் 36, இதழ் 1, பக்கம் 30 இன் தொடர்ச்சி)

உருவக வகைகள் :

இத்தகைய சிறந்த புலமை நலம் கைவரப்பெறுதவர்களுக்குத் தம்முடைய கவிதைகளில் உருவகம் புணர்த்தல்என்பது. எளிதில் இயலமாட்டாது அவர்கள் மிக முயன்று ஓரோவழி உருவகம் புனைந்தாலும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போல அஃது ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற் சென்று, வ று பிறிதொன்றாகி, அறிவும் பிழைபட்டே முடிந்தொழியும். இன்னோரனைய பிழைபட்ட உருவகங்களையே ' கலவை யுருவகம் ' (Mixed Metaphor) என்பர் அறிஞர். " I smell a rat I see him floating in the air, but I shall nip it in the bud " என்னும் ஆங்கில மொழிவாக்கியம் போல்வன, இக்கலவை யுருவகத்திற்குப் பொருத்தமான நல்ல எடுத்துக்காட்டாகும்.

இங்ஙனம் ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற்குச் சென்று, பின் வேறொன்றாக முடிந்து பிழைபட்டொழியாமல், ஒன்றோடு ஒன்று இயல்பான தொடர்பும் இயையும் பொருந்துமாறு, திறன் தெரிந்து தேர்ந்து அமைத்தல் சிறந்த கவிஞர் பெருமக்களுக்கே செவ்விதின் வாய்க்கும். இதனை இயைபு உருவகம் எனவழங்குவர்.

மேலும் இவ்வியைபு உருவகத்தினையே அரை குறையாகச் செய்து விடுக்காமல், முழுவதும் அமைந்து பொருந்துமாறு முற்றாக எடுத்து, நீளப் பிணைத்துத் தொடுத்து முடித்தல் என்பது, ஓர் அரிய பெரிய கலைத்திறன் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம் எடுத்த ஒரு கருத்தினையே படிப்படியாக வளர்த்துப் பொருத்தமுற இயைத்து, நீள நெடுகத் தொடுத்து முடிக்கும் உருவகம் முற்றுருவகம் (Sustained Metaphor) எனப் பெயர் பெறும்.

இயைபு முற்று உருவகம் :

தனித் தனியே பல இடங்களிலும் சிதறிப் பிரிந்து கிடக்கும் பொருள்களை யெல்லாம், ஒருங்கே தொகுத்துத் தொடர்பு படுத்தி அவ் அருங்கலைத்திறத்தால், நம்மனோரின் சிந்தனை யுணர்வுக்குத் தெவிட்டாத விருந்தளித்து, உவகைச் சுவை யூட்டி நிற்கும் மாட்சிமையுடையது. இயைபு முற்று உருவகம் என்னும் அணி. 2

திருவண்டப்பகுதி என்னும் திருவாசகப் பாடலின்கண், இத்துணைச் சிறந்த இயைபு முற்றுருவக அணியானது, இணை யற்ற எழில் மிக்க முறையில் அமைந்திருப்பது திருவாசகத்தின் இலக்கியத் திறனை விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

உருவகப் பொருத்தம் :

(1) மாணிக்கவாசகர் சிவபெருமானைப் 'பரமானந்தப் பழங் கடல்' எனக் குறிப்பிடுகிறார். கடல் எல்லையற்றுப் பரந்து விரிந்து விளங்குவது இறைவனும் அத்தகையவன். உலகைச் சூழ்ந்து கிடக்கும் கடல்களின் வேறு பிரித்து, இறைவனை உணர்த்துவதற்காகப் 'பழங்கடல்' எனவும், 'பரம ஆனந்தக்கடல்' எனவும் சிறப்பித்தார்.

(2) கடல்நீரே மேகமாக மாறி வருதல்போல, இறைவனே குருவடிவத்தில் தோன்றி எழுந்தருளிப்போந்த அருமைப்பாடும் சிறப்பும் விளங்க, 'அண்டத்து அரும்பெறல் மேகன்' என்றார். மழை பெய்து உலகைக் காக்கும் மேகம், அருள் சொரிந்து உயிர் களைக் காத்து நலம் புரியும் இறைவனின் இயல்புக்கு ஒருபுடை உவமையாகும். மேகம் போன்று வரையா வண்மையுடைய இறைவன், 'மேகன்' எனச் சிறப்பிக்கப்பெற்றான். அவனது அருமையும் பெருமையும் முறையே, 'அரும்பெறல்', 'அண்டத்து' என்னும் அடைமொழிகளால் உணர்த்தப்பெற்றன.

---

2 "Metaphor is the supreme agent by which disparate and hither to unconnected things are brought to gether in poctry for the sake of the effects upon attitude and impulse which spring from their collocation and from the combina- tions which the mind then establishes between them "

—Dr. I. A. Richards,

Principles of Literary Criticism, 239.

(3) மேகம் ஒரு மலையைச் சென்று சார்ந்து, அங்கே தங்கிப் படிந்து மழைபொழியும் தன்மையதாதல் போல, இறைவன் குருவடிவம் கொண்டு திருக்கயிலையினின்று பெயர்ந்து, சிறப்பு மிக்க திருப்பெருந்துறைக்குப் போந்தருளினன் ஆதலின், அத்தலத்தினை மலையாக உருவகம்செய்து 'திருவார் பெருந்துறை, வரையில் ஏறி' என்பர்.

(4) மேகம் மலையின்கட் சென்று தங்கி மழை பெய்யத் தலைப்படுங்கால், மின்னல் ஆகிய ஒளியைத் தோற்றுவிக்கும்; அதுபோல இறைவன் குருவடிவம் கொண்டு போந்து, தனது பேரெழில் ஒளி வடிவைக் காட்டினனுகலின், அதனைத் 'திருத்தகும் மின்னெளி' என்ருர்.

(5) மேகத்தினின்று மழை பொழியத் தலைப்படுங்கால், மின்னலுடன் இடிமுழக்கமும் நிகழ்தல் இயற்கை. அதுபோல இறைவனின் திருவுருவக் காட்சி எய்தும் பேறுபெற்ற அடியவர்களுக்கு, அவ் இறையருளால் மணி கடல் யானை குழல் மேகம் வண்டு தும்பி வீணை பேரிகை யாழ் என்னும் தசவித நாதங்கள் முழங்குதல் கேட்கப்பெறும். ஆதலின் அவ்வனுபவத்தினை 'முரசு எறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி' என மாணிக்க வாசகர் மொழிந்தருள்கின்ருர்.

(6) மேகம் மழை பொழியுங்கால் நிகழும் மின்னலொளியும், இடி முழக்கமும் காரணமாகப் பாம்புகள் இறந்துபட்டு அழிவது இயல்பு அம்முறையில் இறைவனின் திருவுருவக் காட்சியும், திருவருட்பேறும் தலைப்பட்ட அடியவர்களுக்கு, தம்மைக் கட்டுறுத்திப் பிறவியின்கண் செலுத்திவந்த பந்தனைகள் ஆகிய ஐம்புல அவாக்கள் அறவே நீங்கி அழிந்தொழிதல்பற்றி "ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய" என்ருர்.

(7) மேகம் மழை பொழியத் தொடங்கினுல், கோடைக் காலத்து வெப்பம் குறைந்து தணிவு எய்தும். அதுபோன்றே இறைவனின் திருவருளுக்கு உரியவராயினபின், அடியவர்களின் துயரங்களும் முடிவெய்தும். இவ்வுண்மை "வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப" எனச் சுட்டப்பெற்றது.

(8) மேகம் மழை பொழிகின்ற கார்காலத்தில், தோன்றியு காந்தளும் ஆகிய பூக்கள் மலரும்; இந்திரகோபப் பூச்சிகள் எங்கணும் தோன்றிப் பரந்து விரைந்தழியும். மாணிக்க வாசகர்க்கு இறைவன் குருவடிவில் எழுந்தருளி, 'அஞ்சேல்' என்று காட்டியருளிய திருக்கையாகத் தோன்றி மலரும்,

இறைவனைக் காணப்பெற்று வணங்கிய அடியார்களின் கூப்பிய கைகளாகக் காந்தள் மலரும், இறைவனின் அருளை எய்தப் பெற்றதனால் அடியவர்களின் பிறப்பிறப்புக் கவலைகள் அழிந்தொழிதலாக இந்திர கோபப் பூச்சிகள் (ஈயல்) பரவி அழிதலும், பொருத்தமுற உருவகம் செய்யப்பெற்றுள்ளன.

(9) கார் காலத்தில் மழை பொழிவதற்கு முன்னர், வேனிற் காலத்து வெயிலில், காடுகளிலுள்ள மான்கூட்டங்கள் நீர்விடாய் கொண்டு, பேய்த்தேர் (Misage) ஆகிய கானலினை, நீர் என்று மயங்கித் தேடி ஓடி அலைந்து திரிந்து வருந்தும், அறுவகைச் சமயத்தவர்களை மான் கூட்டமாகவும்; அவர்தம் பொருந்தாக் கொள்கைகளை நீர்விடாய் தணித்தற்குதவாத கானல் நீராகவும், இங்கு மாணிக்கவாசகர் உருவகம் செய்துள்ளார்.

(10) மழை பொழிதலினால் ஆற்றில் நீர் பெருகுதலை அருள் வெள்ளம் என்றும், அதன்கண் சுழிகள் கொழித்தலை இன்பமே வீடு என்றும், இரு கரைகளும் சரிதலை உலகியற் பந்தபாசங்களின் ஒழிவு என்றும், இரு கரைகளிலுமுள்ள மரங்கள் வெள்ளப் பெருக்கால் வேரற்றுச் சாய்ந்து விழுதலைப் புண்ணிய பாவங்களாகிய இருவினைகளும் நீங்குதல் என்றும், வெள்ள நீர் பாயப் பெறும் வயல்களை அருச்சனை யாகிய வழிபாடு என்றும், விதையினை அன்பு என்றும், அடியார்கள் ஆகிய தொண்டர்களை உழவர்கள் என்றும், பிறவாறும் ஏற்றபெற்றி பொருத்தமுற உருவகித்திருக்கும் மாணிக்கவாசகரின் புலமை மாட்சிமை, பெரிதும் புகழ்ந்து போற்றற்பால தொன்றாகும்.

திருவண்டப்பகுதியின் சிறப்பு :

கவிஞனின் தூய சிறந்த உணர்ச்சியானது உந்தப்பெற்று மேலெழுந்து பொங்கி ஆற்றலுடன் வெளிப்படும்போது, அழகிய இனிய அரிய சொற்களும் சொற்றொடர்களும், அக்கவிஞன் ஒரு சிறிதும் முயற்சி செய்யவேண்டாமல், தாமே தம்முள் இகலிக்கொண்டு முன்வந்து நின்று, ஏவல் கேட்டுப் பணிபுரியும் நிலையில், அவன் பாடும் கவிதைகளில் மிகவும் சிறப்புற அமைந்து திகழும் என அறிஞர்கள் கூறுவர். 3

---

3 When the moment of intense feeling comes, fine phrasing is out of question ..."

— P. H. B. Lyon, The Discovery of Poetry, 184.

அவ்வுண்மைக்கு ஏற்பவே, இத் திருவண்டப்பகுதி அகவற்பாவின் சொற்களும், சொற்றொடர்களும் சுவை நிரம்பி, எளிதினிது பொற்புற அமைந்திருக்கின்றன. இனிய சிறந்த இவ்வியல்பு, நினைத்தொறும் நம்மனோர்க்கு இன்பம் விளைவிக்கின்றது. இச்சிறப்பெல்லாம் கருதியே, மேலைநாட்டுப் பேரறிஞர் ஆகிய திரு. ஜி. யு. போப் அவர்கள், இத் திருவண்டப் பகுதியின் வரிகளை மிகச் சிறப்பாக விதந்தெடுத்து வியந்து போற்றியுள்ளார். 4

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்றால், தாலிபுலாக நியாயம் பற்றித் திருவாசகத்தின் இலக்கியத் திறம் இனையதென்று யாவரும் கருதியுணரலாம். இத்தகைய இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் ஒருங்கே கலந்து நிறைந்து, இணையற்று விளங்கும் செந்தமிழ்த் தெய்வப் பனுவல் ஆகிய திருவாசகத்தினை, நம்மனோர் அனைவரும் பலகாலும் ஓதிப் பயின்று நலங்கள் பெற்று மகிழ்வோமாக!

திருக்குறள் போல் நீதிநூல்;
    சிவஞான போதம்போல்
பெருக்கமிகும் மெய்ப் பொருள்நூல்,
    பீடுயர் தொல் காப்பியம்போல்.
திருத்தமிகும் இலக்கண நூல்;
    சிறந்த திருவாசகம் போல்
உருக்கமிகும் இலக்கிய நூல்;
    உலகினில்வே றெங்குமில்லை!

—ந. ரா. முருகவேள்.

---

4 "Lines 66-95 are wellnigh untranslatable for they contain a subtle and intricate allegory, by means of which the grace of the manifested Sivan, who is praised under the title of the 'Cloud' is set forth...... In these profound and pithy lines, every particular of the description has its mystical meaning......"

—Dr. G. U. Pope.

செய்திகள்

தருமையாதீனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்தில் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 8—1—77 சனிக்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் குருமூர்த்தத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றி பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினார்கள். மாலை வழிபாட்டில் "இருபா இருபஃது" என்ற சாத்திர நூல், விளக்கஉரை ஆங்கில மொழி பெயர்ப்புக்களுடன் வெளியிடப்பெற்றது. காலை, மாலை இரு வேளைகளிலும் இருபா இருபஃது என்ற நூல் பற்றிய சாத்திர விரிவுரை அறிஞர்கள் பலரால் நிகழ்த்தப்பெற்றது. வழிபாட்டிற்கு மாயூரம் அன்பர்களும், மற்றும் பலரும் வந்து வழிபட்டுக் குருவருள்பெற்றனர்.

ஜன்ம நட்சத்திர வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாதஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் 8—1—77 சனிக்கிழமை யன்று கடம்பூர் கரக்கோயில் ஸ்ரீ சோதிமின்னம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசர் திருக்கோயிலில் சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. "கடம்பூர்த் திருப்பதிகம்" என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. வழிபாட்டின்போது திருப்பதிகப் பாராயணம் நிகழ்த்தப் பெற்றது. கடம்பூர்ப் பெருமக்கள் ஆதீனத்திலிருந்து வழிபாட்டிற்காகச் சென்றிருந்தவர்களை வரவேற்று உபசரித்தனர். நண்பகலில் மாகேஸ்வர பூஜையும் விரிவான முறையில் நிகழ்த்தினார்கள். அன்று மாலை சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கடம்பூர் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள், ஆதீனக்கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் M.A., அவர்களும் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி M.A., அவர்களும்

திருப்பதிக விளக்கத்துடன் சமய விரிவுரை யாற்றினர்கள். முந்நூற்றுக்கும் மேற்பட்ட கடம்பூர் கிராமவாசிகளும் மற்றும் பலரும் திரளாக வந்து கேட்டும் வழிபட்டும் இறையருளுக்கு உரியவராயினர்.

திருக்குடந்தையில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு மாபெரும் வரவேற்பு

சமய உலகில் இருபத்தொன்பது ஆண்டுகளாகக் குடந்தைப்பகுதியில் சமயப்பணிபுரிந்து மக்களிடையே பக்தி நெறியை வளர்த்துவரும் சிவனடியார் திருக்கூட்டத்தின் 29 ஆவது ஆண்டு விழா 31—12—76 அன்று தொடங்கி 2—1—77 வரை மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களால் தொடங்கிவைக்கப்பெற்று வளர்ந்துவரும் இச்சிவனடியார் திருக்கூட்டத்தின் நிறைவு நாளன்று தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளி அருளாசி வழங்கினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 2—1—77 ஞாயிறு மாலை திருபுவனம் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி மாலை 6மணி அளவில் குடந்தைமாநகருக்கு எழுந்தருளினார்கள்,

குடந்தைமாநகரம் தோரணங்கள் முதலியவற்றால் ஒப்பனை செய்யப்பெற்று விழாக்கோலம் கொண்டிருந்தது, பக்தர்கள் பூர்ணகும்பம் முதலியவற்றுடன் வரவேற்க, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ அபிமுக்தேசுவரர் திருக்கோயிலில் வழிபாடாற்றி ஸ்ரீ சோமேசர் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார் கள். பூர்ணகும்ப மரியாதைகளுடன் சிவனடியார்கள் பலரும் குருமணி அவர்களை வரவேற்றார்கள். சிவனடியார் திருக்கூட்டத்தவர்கள் சார்பில் திரு. P. T. S. சிங்காரம் செட்டியார் ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களின் திருவடிகட்குப் பாதபூசை முதலியன செய்து வழிபட்டு வரவேற்றார்கள். வழிபாட்டிற்குப்பின்னர். திருமுறைப் பாராயணத்துடன் பாத யாத்திரையாக ஸ்ரீ கும்பேசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். குடை, கொடி, ஆலவட்டங்கள். வாணவேடிக்கைகளோடு மேளவாத்தியங்கள் முழங்க அன்பர்களும் சிவனடியார்களும் புடைசூழ திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருக்கல்யாண மண்டபத்தில் கொலுவீற்றிருந்து அடியவர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். பின்னர், விழா மேடைக்கு எழுந்தருளி

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசிவழங்கினார்கள்; குடந்தை நகரப் பெருமக்களும் அறநிலையத்துறை அதிகாரி களும் மற்றும் அன்பர்கள் பலரும் விழாவில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

திருப்பொன்னூசல் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திலும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திலும் 27—12—76 திங்கட்கிழமை முதல் பத்துநாட்கள் ஊஞ்சல் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாள் மாணிக்கவாசகர் பிராகாரத் தில் வலம் வருதல் நிகழ்ந்தது. பின்னர் ஊஞ்சலில் சுவாமியை யும், அம்பாளையும் எழுந்தருளச்செய்து திருவெம்பாவை ஓதி தீபாராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 5—1—77 புதன் அன்று ஸ்ரீ நடராஜர் அபிஷேகமும் தரிசனமும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலயத்தில்

பெரிய புராணம், திருக்கோவையார் விரிவுரை

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலயத்தில் திரு. எஸ். சிவகுமார் அவர்களால் 12—12—76 அன்று பெரிய புராண விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. திருஞானசம்பந்தர் புராணம் தொடர்ந்து நடைபெறுகின்றது.

தருமையாதீனப் புலவர் சித்தாந்தப் புலவர்மணி திரு. N. R. முருகவேள் அவர்கள் 13—12—76, 20—12—76, 28-12-76 ஆகிய நாட்களில் திருக்கோவையார் விரிவுரை நிகழ்த்தினார்கள். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு விரிவுரை களைக் கேட்டுப் பயனுற்றனர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

I had the pleasure of visiting this great temple today with my family. This perhaps is one of the very few Hindu Temples neatly maintained. One has to spend at bast few hours to understand the arctitechural beauty of this temple.

(Sd.) A. Balraj,
Collector, Pudukkottai.

2—12—76.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(நளஹு தைமீ 1௳ முதல் 29௳ முடிய)

(14—1—1977 முதல் 11—2—1977 முடிய)

	குரு கே		
சு	இராசி		சனி
சூ			
செ பு	ல	சந்ரா	

ஸ்ரீ நளஹு மார்கழி மீ 29௳ குருவாரம் சுவாதி நக்ஷத்திரம் கரசை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 49 நாழிகை 5ɔ - வினடிக்கு விருச்சிகலக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் தனுர்ராசியிலிருந்து மகர ராசியில் சங்கிரமணமாக தை மாதப் பிரவேசம் செய்கிருர். மறுதினம் சுக்கிரவாரம் ஸ்ரீ நளஹு தை மாதம் முதல்தேதி உத்ராயண புண்ணியகாலமாகும். சுக்கிரன் நீரஸாதிபதியாகிருர். சங்கிரம தேவதை மித்திரா தயிர் அபிஷேகம் செய்து கோமேதகம் ஆபரணம் பூண்டு மந்தாரை புஷ்பம் சூடி ஈயப்பாத்திரத்தில் பால் போஜனம் உண்டு அஸ்திராயுதத்துடன் தங்கக் குடையின்கீழ் ஸ்படிக சாமரம் வீசப்பெற்று யானைவாகனம்மீது அமர்ந்து அர்த்த ராத்திரிக்குப்பிறகு வெள்ளிக்கிழமையில் மேற்காக நகர்ந்து மகரராசியில் பிரவேசிப்பாள்.

அதன் பலன், கால்நடை பசுக்கள் விருத்தியாகும். ஸ்திரீ பிரஜைகளுக்கு உயர்வு உண்டாகும். இரத்தின வியாபாரிகளுக்கு நற்பலன் தரும். இந்திய நாட்டின் பொருளாதாரம் சீர்படும். உணவு தானியங்களின் விலைவாசி குறையும்.

எண்ணெய்வித்துக்களின் விலைவாசி கட்டுப்பட்டு சீராக இருக்கும். பருத்தி ஜவுளிகளின் உற்பத்தி அதிகரிக்கும். தேசங்களில் எங்கும் அதர்மம் நீங்கும். தர்மம் ஓங்கும். உலகெங்கும் உள்ள திருமடங்கள், ஆசார்ய பீடங்களில் உள்ள தவ சீலர்களான மகான்களின் தவநெறியில் தெய்வீக அருளால் திருவாய் மலர்ந்தருளுகின்ற உபதேசாதிகளின்வழிநின்று தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றுவரும் நியமத்தினுல் இவ்வுலகில் சுபிட்சம் நிலவும். பிரஜைகள் தெய்வ பக்தியுடன் தனதான்ய சேர்க்கை யுடையவர்களாக இனிது வாழ்வர்.

குறிப்பு:- இப்பகுதியில் இராசிகளுக்கு கிரகங்களின் காரகம் ஆதிபத்தியாதிகளுக்கு கோசாரத்தில் உத்தம பலன், மத்திம பலன், அதமபலன் இவற்றை அறியும் பொருட்டு பொதுவில் எழுதப்படுவதாகும்.

2. இதில் சுருக்கமாக கிரகங்களின் ஓரிரு காரகங்களை முக்கியமாகக் கொண்டு வாசக அமைவு உள்ளது. மற்றும் வேண்டிய விஷயங்களுக்கு கிரககாரகங்களின் அந்தந்த ராசியில் கூறியவாறு கொள்க.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாவிருத்தியில் நாளுக்குநாள் முன்னேற்றம் ஏற்படும். பணவசதி போஜன சௌகரியங்கள் திருப்திகரமாக இருந்துவரும். சகோதர நலம் சாதாரணமாக இருக்கும். பெற்றோர், மேலோர் பெரியோர்களின் விசுவாசம் திடமாக இருந்துவரும் பூமி, இயந்திர வகையில் சற்றே சிரம சூழ்நிலையாயினும் பிற்பகுதியில் பலன் கொடுக்கும். புத்திரர் புத்திரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுகம் மேலிடும். இம்மாதம் 17உ க்குமேல் தொழில் அல்லது உத்தியோகத்துறையில் தனக்கு சாதகமாக அமைதல் காணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாவிருத்தியில் சௌகரியங்களும் பணவரவுகளும் இருந்துவரும்

வரவுக்கு முன்னதாகச் செலவுகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும். சகோதரர் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டுக் குணமாகும். பூமி இயந்திர வகையில் ஓரளவு பலன்தரும். வித்துவத்துவம் கலைத் துறையில் நன்மதிப்பை ஏற்படுத்தும். புத்திரசௌக்கியம் தார சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மாதப் பிற்பகுதியில் நலன்தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½– திருவாதிரை–புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பத்தில் பணவசதி சீராக இருந்துவரும். தன்வாக்கு பிறருக்கு வெறுப்பாகத் தோன்றும். சகோதரர் பந்துக்கள் மிச்சிரமாக இருந்து வருவர். பொதுநலக் காரியங்களில் எதிர் பாராத தொல்லைகள் வரினும் தெய்வானுக்கிரகத்தினுல் அவை நீங்கும். மேலோர், பெரியோர்களினுல் நன்மைகள் இருந்து வரும். புத்திரர் புத்திரிகளின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் தெய்வ பக்தி நிரம்பிக் காணும். செய் தொழில் அல்லது உத்தியோகம் பெருமதிப்புடன் நடந்துவரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். தனுதி சௌகரியங்கள் திருப்தியளிப்பதாக இருந்துவரும். சகோதரர் நலம் மேலாக இருந்துவரும். சகல காரியங்களும் புத்தி சாதுரியத்தில் வெற்றிகரமாய் நடந்துவரும். வாகன சௌகரியம் கட்டிட அபிவிருத்தி ஆகிய நற்பாக்கியம் பெருகிக்கொண்டிருக்கும். புத்திரர்களின் கல்வி, கலை, தொழில் நுட்ப அலுவல்களில் பிரபலம் தரும். சரீரம் வாயு பீடிப்பாகவும் வலியாகவும் இருந்து குணமாகும். தன் மனைவிக்கு உஷ்ணவாத ரோகம் வந்து குணமாகும். சனிக்கிரகபிரீதி செய்ய நலம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் திடமாக நடந்துவரும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவசதி மாத முதலில் சாதாரணப் பலனுக

இருக்கும். பிற்பகுதியில் அதிகமான செலாவணியை உண்டு பண்ணும். சகோதரர் புத்திரர்களின் விசுவாசம் உதவிகள் சந்தோஷம் அளிக்கும். சத்துரு பங்கமாகும். பூமி எந்திர வகையில் அபிவிருத்தி ஏற்படும். 14வுக்கு மேல் பெண்கள் வகை கலகங்கள் நீங்கும். பசு பால் பிராப்தியை யளிக்கும். இலட்சுமிகர மான செல்வப் பெருக்கை உண்டாக்கும். செய் தொழிலில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். தனச் செலாவணி சாதாரணமாக இருந்துவரும். சகோதரர் தார புத்திரர்களின் நலன்களுக்கு அதிகமான செலவை ஏற்படுத்தும். பூமி இயந்திர வகையில் சிரமம் தோற்றினும் ஆதாயம் இருந்து வரும். சரீரத்தில் மார்புவலி, வயிற்றுவலி போன்ற உஷ்ண பீடிதம் வந்து குணமாகும். ஞாயிற்றுக் கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். குடும்பத்தினருக்கு சௌக்கிய பலன் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் அனுபவசாத்தியத்தினல் நன்றாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. தூ. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தி முன்னேற்றமாக இருந்துவரும். சமயோசிதமாக வருமானங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரர் சகோதரி களுக்கு சௌக்கிய பலனாக இருந்துவரும். மனோதைரியமாக எல்லாக்காரியங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி எழுத்துத்துறைகளில் மாத பிற்பகுதியில் நற்பலன் தரும். தாம்பத்திய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். தெய்வ தரிசனம் க்ஷேத்திராடனம் ஆகிய புண்ணிய பலன் கிடைக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அரிய காரிய சித்தியை ஏற்படுத்தும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பத்தில் சாதாரணமாக வரவேண்டிய வருமானங்கள்

வந்துகொண்டிருக்கும். ஆயினும் சமச்செலவை ஏற்படுத்தும். சுகசௌகரியங்களும் பசு பால் கறவையும் குறையாமல் இருந்து வரும். அவசர மனோவேக பேச்சுக்களால் குடும்பத்தாரிடையே வெறுப்புணர்வு ஏற்பட்டுமாறும். வித்துவத்துவம்கலைத்துறையில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இம்மாதம் பெண்மகவு பிராப்தி ஒன்று ஏற்படும். கணவன் மனைவியின் வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராசாங்க அனுகூலம் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். குடும்பத்தில் பண வரவு போஜன சௌகரியம் திருப்திகரமாக இருந்து வரும். பெற்றோர், சகோதரம், பந்துக்களால் அதிகமான செலவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். புத்திரர் புத்திரிகளின் சௌகரியம் சாதாரணமாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் விருப்பு, வெறுப்பு கலந்து இருப்பினும் இல்லற சம்பிரதாயங்கள் நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண பலனை இருந்துவரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்ப சௌகரியம் நன்றாகவும் ஓரளவு பணவரவும் இருந்துவரும். சகோதரர் பந்துமித்திரர்களால் தவிர்க்க இயலாத அவசிய செலவையும் உண்டுபண்ணும். புத்திரர், புத்திரிகளின் நலன் மேன்மை ஸ்திதியில் இருந்துவரும். பெண்கள் வகை சுக விருத்தி மேலாக இருந்துவரும். பூமி இயந்திர வகையில் இம்மாதம் பிற்பகுதியில் ஓரளவு ஆதாயம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் நன்றாக நடைபெற்று வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. த.)

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் நாளுக்கு நாள் முன்னேற்றம் காணும். பண சௌகரியம் போஜன சௌகரியம் திருப்தியளிப்பதாக இருந்துவரும். பூ

கிரக ஸ்திர சொத்துக்களில் நற்பலனைக் கொடுக்கும். சகோதரர் புத்திரர்களுக்கு சௌகரியத்தையும் வருமானத்தையும் ஏற்படுத்தும். கணவன் மனைவியின் வாழ்க்கையில் அன்யோன்ய நிலைமையையும் சௌக்கியபலனையும் அளிக்கும். செய்தொழில்கள் மனோதிடமாகச் செயல்பட்டுவரும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி– ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீன ராசி 9 பாதங்களும், சுப பலன் தரும். பண சௌகரியம் பெருமதிப்பாக இருந்துவரும். இதுவரை மூதலீடாக முடங்கியிருந்தவற்றிலிருந்து அதிக இலாபத்தை உண்டுபண்ணும். சகோதரர் உதவியாக ஒத்துழைப்புத்தருவர். பூமி இயந்திர வகையில் சிரமங்கள் ஏற்படினும் பயனுள்ளதாகும். புத்திரர் புத்திரிகள் க்ஷேமகரமாக இருந்துவருவார்கள். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். இல்லறம் சிறப்பாக நடந்துவரும். செய்தொழில்களில் திரண்ட இலாபத்தை உண்டுபண்ணும். வெள்ளி சனி சுபமாகும்.

சிறுவர்களுக்கு:

சென்ற இதழ்க் கணக்கின் விடை :-

(மலர் 36 இதழ் 1 பக்கம் 35)

முத்துக்கள் 25; அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 3,250.

ஒரு மனைவிக்கு முத்து 5. அவற்றின் மதிப்பு ரூ. 650.

முத்துக்களின் வரிசை எண்கள் தரப்பெற்றுள்ளன. ஒவ்வோர் எண்ணுக்கும் பூஜ்யம் கூட்டி விலைமதிப்பை அறியவும்.

முதல் மனைவி	5	9	13	17	21	=	ரூ. 650.
இரண்டாம் மனைவி	25	4	8	12	16	=	,,
மூன்றும் மனைவி	20	24	3	7	11	=	,,
நான்காம் மனைவி	15	19	23	2	6	=	,,
ஐந்தாம் மனைவி	10	14	18	22	1	=	,,